# டேவிட் லிவிங்ஸ்டன்

UNIVERSITY EXTENSION LIBRARY
22 FEB 1961
MADURAI

கா. அப்பாத்துரைப் பிள்ளை, M.A., L.T.

Approved by the Madras Text-Book Committee for class use—Non-detailed Study: Vide page 3, Part II, Supplement to Part I-B, Fort St. George Gazette dated 27th December 1949

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
பவழக்காரத் தெரு :: சென்னை 1.
1950 [10 அ

*First Published: February 1949.*
*Reprinted: June 1950*

The Progressive Printers, Madras 1

# முகவுரை

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது அப்பர் ஸ்வாமிகள் அருள் வாக்கு. அதன்படி பொதுமக்கள் நலத்தையே நாடி உழைத்துத் தம் நலத்தை இழந்த பெருமக்கள் பலராவர். அவர்களைத் 'தியாக புருஷர்' என்று சொல்லலாம். தம் நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்வதைவிட வேற்று நாடு சென்று, அநாகரிக மக்களுடன் வாழ்ந்து அவர்களை நல்வழிப்படுத்தலில் தம் வாழ்நாளைக் கழித்தல் அருமையினும் அருமை! பெருமையினும் பெருமை!! தமக்கு நன்மைசெய்ய வந்தவர் என்பதை அறியாது அப்பாமர மக்கள் அப்பெருமக்களைக் கொல்லவும் துணிவர். பெருமக்கள் அவர்களை மன்னித்து, அவர்களோடு எளிய வாழ்க்கை வாழ்ந்து அவர்களை நல்வழிப்படுத்துவதிலேயே நாட்டங்கொண்டனர் எனின், அப் பெருமக்கள் பூஜிக்கத்தக்கவரே ஆவர்.

அத்தகைய பெருமக்களில் டேவிட் லிவிங்ஸ்டன் ஒருவர். இவரது தியாக வாழ்வு நம் மாணவர்க்கு ஓர் முன்மாதிரியாகும். 'இந்தியாவுக்கு இத்தகைய தியாக புருஷர் பலர் தேவைப்படுகின்றனர்,' என்ற விவேகானந்தர் திருவாக்கு சிந்திக்கத்தக்கது.

EXTENSION LIBRARY
MADURAI

# பொருள் அடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | .... | 1 |
| 2 | குடும்பமும் பிறப்பும் | .... | 3 |
| 3. | இளமை; கல்வியில் ஆர்வம் | .... | 7 |
| 4. | உயர்தரக் கல்வியும் பணியேற்பும் | .... | 12 |
| 5. | தென் ஆஃப்ரிகா செல்லல் | .... | 14 |
| 6. | குருமான் பணி நிலையம் | .... | 18 |
| 7. | அரிமா வேட்டை | .... | 24 |
| 8. | மண வாழ்க்கை | .... | 30 |
| 9. | ஸெச்சில் மனமாற்றம் | .... | 31 |
| 10. | கலஹாரிப் பாலைவனம் | .... | 36 |
| 11. | இரண்டாம் பிரயாணம் | .... | 42 |
| 12. | கிழக்கு ஆஃப்ரிகா | .... | 53 |
| 13. | மூன்றும் பிரயாணம் | .... | 60 |
| 14 | லிவிங்ஸ்டன் மறைவு | .... | 68 |
| 15. | அருங்குணங்கள் | .... | 74 |



டேவிட் லிவிங்ஸ்டன்

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# டேவிட் லிவிங்ஸ்டன்

—:o:—

## 1. முன்னுரை

### இன்பநிலை

மக்களாகப் பிறந்தவர் எல்லோரும் இன்பத்தையும் வெற்றியையுமே நாடுகின்றனர். ஆனால், இன்பத்தின் உயிர்நிலை துன்பத்திற்குள் மறைந்து கிடக்கிறது என்பதையும், வெற்றியின் திறவுகோல் தோல்விகள் என்ற பெட்டகங்களிலேயே புதையுண்டிருக்கிறது என்பதையும் அறிந்தவர் மிகச் சிலரே யாவர். இதனாலேயே திருவள்ளுவர் பெருமான், "இன்பத்தை விரும்பாமல் துன்பத்தையே இயல்பென்று மேற்கொள்பவன் உண்மையில் துன்பத்தை அடைவதில்லை" என்ற பொருளுடன்,

"இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்"

என்று கூறியிருக்கிறார்.

### பெரியர்-சிறியர்

துன்பங்களை வரவேற்று அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டும் உடல்வலியும் மனவலியும் இளமையிலேயே பெரிதும் காணப்படும். இளமையில் துன்பங்களையும் தோல்விகளையும் கண்டு அஞ்சுபவரும், அந்த அச்சத்தினால் ஊக்கம் இழப்பவரும் வாழ்க்கையில் அருஞ்செயல்களைச் சாதியார். அவர் நாளடைவில் சிறுமைப்பட்டுத் தம் வாழ்வில்

வெறுப்பு அடைவர். மேலும் அவர் தம் வாழ்க்கையின் போக்கு முழுவதும் தம் கையில் இல்லை என்றும், வினைப்பயன் அல்லது தலைவிதியின் படியே எல்லாம் நடக்கும் என்றும் எண்ணுவர். ஆனால், வாழ்க்கையில் வெற்றி பெற்றோர் அனைவரும் தம்விதி என்பது, தம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளும் தம் பழைய முயற்சியின்மையின் பயனுமே அன்றி வேறன்று என்று அறிவர். அவர் அவ்விரண்டையும் முயற்சியால் வெல்லலாம் என்று உணர்ந்து மேன்மேலும் முயல்வர். இங்ஙனம் பெரிய காரியங்களில் ஈடுபட்டுப் பெரு முயற்சியால் வெற்றி பெற்றவர்களைக் குறித்தே திருவள்ளுவர்,

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்று பகர்ந்தார்.

பெரியோர் தாம் செய்யும் பெரு முயற்சிகள் சிலவற்றில் இறுதி வெற்றி காணாதுபோதலும் உண்டு. எனினும், உலகத்தார், பெருந்தன்மை மிக்க அத்தகையவர் தோல்விகளைச் சிறியோர்களின் சிறு வெற்றிகளைவிடப் பன்மடங்கு உயர்வு உடையதாகப் போற்றுவர்.

### டேவிட் லிவிங்ஸ்டன்

இங்ஙனம் செயற்கரிய செயல்களில் ஈடுபட்டுப் புகழ் எய்திய உலகப் பெரியார் பலர். அவருள் டேவிட் லிவிங்ஸ்டன்[1] என்ற ஆங்கிலப் பெரியார் ஒருவர். இவர் இளமையிலேயே செயற்கரிய பெருங்காரியங்களைச் செய்யவேண்டும் என்று மனத்தில் உறுதி கொண்டவர்; தம் ஆற்றலையும்

1. David Livingstone.

அறிவையும் பிறர் நன்மைக்காகவும் பிறர் இன்பத்துக்காகவும் ஈடுபடுத்தி உழைத்தவர். அதுமட்டுமன்று. இவர் நாடிய நன்மை தம் நாட்டையோ, தம் இனத்தையோ தம் போன்ற உயர்நிலையினரையோ பற்றியதன்று. நாடுகளில் தாழ்த்தப்பட்ட நாடாய், இனங்களில் சீரழிவுற்ற இனமாய், நாகரிக உலகில் மற்றவர்களுடன் ஒத்து முன்னேற முடியாமல் நின்றிருந்த ஆஃப்ரிக்க நாட்டு மக்கள் நலனுக்கே இவர் பாடுபட்டார்; அதற்காகத் தம் வாழ்க்கை நலன் முழுமையையும் துறந்து உழைத்தார்.

## அருஞ்செயல்

ஒருவர் தம் நலம் துறந்து தம் வகுப்பு நலன், தம் நாட்டு நலன் ஆகியவற்றிற்காக உழைப்பதே உலகில் பெருமையுடைய செயலாகக் கொண்டாடப்படுகிறது. எனவே தம் நாடு, தம் இனம் ஆகிய எல்லைகளைக் கடந்து நாகரிக மக்கள் செல்லாத அடர்ந்த காடுகளிலும் பாலைவனங்களிலும் திரிந்து, அவர்கள் நெருங்கவும் அஞ்சும் முரட்டு மக்களிடையே லிவிங்ஸ்கின் தொண்டாற்ற முன்வந்தது எவ்வளவு உயர்வுடைய செயல் என்று கூறாமலே விளங்கும் அன்றோ?

# 2. குடும்பமும் பிறப்பும்

## ஸ்காட்லாந்து

டேவிட் லிவிங்ஸ்டன் ஸ்காட்லாந்து[1] நாட்டினர். அந்நாடு கல்லும் மலையும் காட்டாறும் நிறைந்தது. இடையிடையே ஆங்காங்கு ஏரிகள் கண்கவர் வனப்புடன் இலங்கும். அந்நாட்டின் கடற்கரை அமைப்பு

1. Scotland.

பிற நாடுகளைப் போலன்றிக் குறுக்கும் நெடுக்குமாகத் துண்டுபட்டுக் கிடப்பது; கடலின் உள் வளைவுகள் நெடுந்தூரம் உள்நாட்டிலும் சென்றிருப்பதனால், அந்நாட்டில் எப்பக்கமாகச் சென்றாலும் அவ்வளைவுகளைச் சந்திக்கவே நேரும்.

### அல்வாத்தீவு

இந்நாட்டின் மேற்குக் கடற்கரையை அடுத்து ஒரு தீவுக்கூட்டம் உண்டு. அத்தீவுகளில் உலகின் மிகப் பழம் பாறைகளும், கடலிலிருந்து தொடங்கி மலைகளின் கீழாக நிலத்தின் அடிவயிற்றைக் குடைந்து செல்வது போன்று நீண்டு அகன்ற கடற் குகைகளும் மிகப்பல. அந்நாட்டு மக்கள் இந்தீவுக் கூட்டத்தை ஹெப்ரிடீஸ்[1] தீவுகள் என்பர். இத்தீவுகளில் ஒன்றாகிய அல்வா[2] என்பதில்தான் டேவிட் லிவிங்ஸ்டன் பிறந்தார்.

### மலைநிலமக்கள் பண்பு

ஸ்காட்லாந்து மலைகளிடையே வாழ்ந்த மக்கள், அம்மலையைப் போலவே திண்ணிய உடலும் கரடுமுரடான வாழ்க்கையும் உடையவர். அவர்கள் ஒப்பற்ற வீரர்கள்; சாவிற்கு அஞ்சாமல் தம் நாட்டிற்காகப் போராடும் பெருந்தகை மறவர்கள். ஆனால், அமைதிக் காலத்தில் அவர்கள் கள்ளம், கபடு அற்ற உழைப்பாளிகள்; மான உணர்ச்சியுடன் உடல் வருந்த உழைத்து எளிய வாழ்க்கை வாழ்பவர்கள். அவர்கள் விடுதலை ஆர்வமுடையவர்கள்; தம்மை அண்டினவரை உயிர்தந்தும் ஆதரிக்கும் இயல்பு உடையவர்கள். அவர்கள் மிக உயர்வாகப் பேணிய அறம் வாய்மை அல்லது உண்மை தவறாமையே யாகும்.

---

1. The Hebrides. 2. The Isle of Ulva.

## முன்னோர் வீரம்

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் ஓர் அரசன் ஆட்சி செய்தான். ஆங்கில நாட்டு மக்கள் அவனை வெறுத்து நாட்டிலிருந்து துரத்திவிட்டனர்; வேறு ஓர் அரச பரம்பரையையும் நிறுவினர். ஸ்காட்லாந்து மக்கள், சிறப்பாக அங்குள்ள மலைநாட்டு மக்கள், இப்புதிய பரம்பரையை ஏற்காது பழைய மரபில் வந்தவர்களையே ஆதரித்தனர்; அவர்களையே அரசராக்கக் கிளர்ச்சி செய்து போராடினர். இத்தகைய பெரும்போர்களில் 'கல்லோடன்' என்ற இடத்தில் நடைபெற்ற போரும் ஒன்றாகும். ஸ்காட்லாந்திலுள்ள மலைநாட்டு மொழியாகிய 'கெய்லிக்' மொழியில் நாட்டுப் பாணர் பலர் இப்போரைப் பற்றிப் பாடியுள்ளனர். டேவிட் லிவிங்ஸ்டனின் முப்பாட்டனார் ஒருவர் இப்போரில் ஈடுபட்டு உயிர் நீத்து 'நாட்டுவீரர்' எனப் புகழ் பெற்றார்.

## உயரிய பண்பு

டேவிட் லிவிங்ஸ்டன் சிறுவராக இருந்த போது, தம் பாட்டனார் மூலமாகத் தம் முன்னோர்களைப் பற்றிய வீரக்கதைகள் பல கேட்டறிந்தார். அதனால், அப்பாட்டனாருக்கு முந்திய ஆறு தலைமுறைகள் வரை யுள்ள முன்னோர் வரலாறு முழுவதும் லிவிங்ஸ்டனுக்குத் தெரியவந்தது. குடும்பத்தின் பரம்பரைப் பண்புகளுள், பாட்டனார் மிக பெருமையுடன் அடிக்கடி எடுத்துக்கூறிய செய்தி, 'அக்குடும்பத்தில் எவரும் வாய்மை தவறியது கிடையாது' என்பதே யாகும். டேவிட்லிவிங்ஸ்டனும் தம் வாழ்நாள் முழுவதும் இப்பண்பில் எத்தகைய குறையும் வராமல் காத்துவந்தார்.

## பாட்டனர்

லிவிங்ஸ்டன் குடும்பத்தார் 1792-ஆம் ஆண்டிலிருந்தே கிளாஸ்கோ[1] நகரத்தில் வந்து குடியேறி இருந்தனர். அங்கு லிவிங்ஸ்டனுடைய பாட்டனர் ஒரு பஞ்சாலையில் வேலை பார்த்து வந்தார். அவருடைய வாய்மையைக் கண்ட ஆலை முதலாளிகளுக்கு அவர்மீது பற்றுதலும் நம்பிக்கையும் மிகுந்தன. ஆயிரக் கணக்கான பெருந் தொகைகளை நிதிநிலையங்களிருந்து எடுக்கவோ, அங்கே கொண்டுபோய்க் கொடுக்கவோ நேர்ந்தபோதெல்லாம் அவர்கள் அவர் மூலமாகவே அத்தொகைகளை நம்பிக்கையாகக் கொடுத்தனுப்பினார்கள்.

## பெற்றோர்

பாட்டனருக்குப் பிள்ளைகள் பலர் இருந்தனர். டேவிடின் தந்தையாகிய நீர் லிவிங்ஸ்டனைத்[2] தவிர மற்றவர் எல்லோரும் அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டிருந்தனர். அவர் ஒருவர் மட்டும் தேயிலை வாணிகம் செய்து வந்தனர். அவர் மிகுந்த சமயப் பற்று உடையவர்; ஞாயிற்றுக் கிழமைகளில்கோவிலுக்குச் சென்று வழிபடுவதுடன் அவ்வப்போது கோவில் மேடையேறிச் சிறு சொற்பொழிவுகளும் செய்துவந்தனர்.

டேவிட் லிவிங்ஸ்டனின் தாயார்ஆக்னிஸ்[3] என்பவர். அவர் 'ஹண்டர்'[4] என்று குடிப்பெயருடைய குடும்பத்தைச் சார்ந்தவர். தாய் தந்தையர் இருவரும் கிளாஸ்கோ நகரிலேயே வீடு அமர்த்திக் கொண்டு வாழ்ந்திருந்தனர். அங்கே 1813-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் நாளில் டேவிட் லிவிங்ஸ்டன் பிறந்தார்.

---

1. Glasgow. 2. Neil Livingstone. 3. Agnes. 4. Hunter.

ஆக்னிஸ் லிவிங்ஸ்டன் வீட்டைச் சுத்தமாக வும் வெளிச்சம் உடையதாகவும் வைத்துக்கொள் வதில் திறமை உடையவர். அங்கங்கே அடுக்குப் பலகைகளிலும் மேடைப் பலகைகளிலும் சட்டங் களிலும் நல்லறிவு தரக்கூடிய புத்தகங்கள் வைக் கப்பட்டிருக்கும். இத்தகைய சுற்றுச் சார்புகளி டையே பிறந்து வளர்ந்த டேவிட், கல்வியறவில் இளமைமுதலே நாட்டங்கொண்டிருந்தமை இயற் கையே அன்றோ?

## 3. இளமை: கல்வியில் ஆர்வம்

### இளமைச் செயல்கள்

நீல் லிவிங்ஸ்டனுக்கு ஐந்து ஆண் குழந்தை களும், இரண்டு பெண் குழந்தைகளும் இருந்தனர். டேவிட் லிவிங்ஸ்டன் அவர்களில் இரண்டாம் பிள்ளையாவர். இவர் இளமையிலேயே தம் தமை யனுடன் சேர்ந்து வீட்டுக் காரியங்களைக் கவனித் துத் தாய் தந்தையருக்கு உதவி செய்வார்; வேலை யில்லாமல் ஓய்ந்த நேரங்களில் ஊர்ப்புறங்களிலும் கடற்கரையிலும் சென்று உலாவுவார். அப்போது ஆங்குக் காணும் பற்பல வண்ணப்பூக்களையும், பலவகைச் சிப்பிகளையும், கூழாங்கற்களையும் திரட் டிக் கொண்டு வருவார்; ஆறுகளில் தூண்டிலிட்டு மீன் பிடித்தும், ஓடியாடி நீந்தியும் பொழுது போக் குவார்.

### உயரிய எண்ணம்

டேவிட் லிவிங்ஸ்டனின் குடும்பம் மிக்க செல்வம் உடையதன்று. ஆதலால் இவர், தம் பத் தாம் வயதிலேயே பாட்டணர் தொழிலில் ஈடுபட்டுப்

பஞ்சு ஆலையில் வேலை பார்க்கத் தொடங்கினர். ஆனல் இளமையிலேயே இவருடைய அன்னையார், இவருக்குப் புத்தகங்கள்மீது பற்றுதலையும், சமூக சேவை செய்யும் எண்ணத்தையும் ஊட்டியிருந்தார். ஆகவே, டேவிட் கூலிவேலை செய்யும்போதும் தம்மால் முடிந்த அளவு அரிய நூல்களைக் கற்பதில் தம் ஓய்வு நேரத்தைக் கழித்தார். இவர், ஆலையில் இயந்திரங்களுக்கிடையே, ஏதேனும் ஒரு புத்தகத்தை விரித்து மாட்டி வைத்திருப்பார்; வேலைக்கிடையில் கிடைக்கும் சிறிது ஓய்வு நேரங்களிலும் அவற்றை ஆவலுடன் படித்துகொண்டு இருப்பார். இவர், அவ்வப்போது தம்மைவிடத் துன்பப்படும் ஏழைகளுக்கு உதவி செய்வார்; உலகில் துன்பப்படுபவர்க்கெனத் தம்மால் எதிர்காலத்தில் சிறிதளவாயினும் உதவி செய்யக் கூடுமா என்று ஆராய்வார். அவ்வெண்ணம் நிறைவேறுதற்காக இவர் எப்போதும் திட்டமிட்டுக்கொண்டே இருப்பார்.

## கல்வியில் ஆர்வம்

லிவிங்ஸ்டன், தாம் பெறும் சம்பளத்தில் ஒரு பகுதியைத் தம் மனத்துக்குப் பொருத்தமான புத்தகங்களை வாங்குவதிலேயே செலவு செய்தார். திறம்பட்ட ஆசிரியர் கற்பித்தாலும் மாணவர்க்கு எளிதில் விளங்காத் தன்மையது இலத்தீன்[1] இலக்கணம். லிவிங்ஸ்டன் அத்தகைய இலக்கணத்தைப் பிறர் உதவியின்றித் தாமாகக் கற்றறிந்தார். இச்செயல் ஒன்றே, இவரது புத்தக ஆர்வம் எவ்வளவு என்பதை அளவிட்டு உரைக்குமன்றே! இவர் ஆலையில் வேலை செய்து கழித்த ஆறு ஆண்டிற்குள்

1. Latin.

இலத்தீன் மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றார்; அத்தேர்ச்சியின் உதவியால் விர்ஜில்,[1] ஹோரேஸ்[2] முதலியோர் எழுதிய சிறப்புவாய்ந்த இலக்கிய நூல்களைக் கற்று, அவற்றின் பொருளை அறிந்துகொள்ளத்தக்க அறிவுடையவரானார்.

லிவிங்ஸ்டன், காலை ஆறுமணி முதல் இரவு எட்டுமணி வரை ஆலையில் வேலை செய்வது வழக்கம். ஆனால் இவர், மேலும் தம் அறிவை வளர்க்க விரும்பினார். எனவே இவர், ஆலையிலிருந்து வந்த பின்னும், ஆலை முதலாளிகள் பண உதவி செய்து நடத்திவந்த ஏழைப் பிள்ளைகளுக்குரிய பள்ளிக்கூடம் சென்று ஒருமணி நேரம் படித்தார். அதன் பின்னும் உறங்க மனமின்றிப் பன்னிரண்டு அல்லது ஒருமணி வரை தம் வீட்டில் படித்து வந்தார். இங்ஙனம் இவர் ஓய்வின்றிப் படித்து வருவதைத் தாயார் கண்டனர்; இங்ஙனம் படிப்பதால் தன் மகனின் உடல் நிலை கெடும் என அவர் அஞ்சினார். ஆதலால் சில வேளைகளில் அவர், லிவிங்ஸ்டன் கையிலுள்ள புத்தகத்தை வாங்கிப் பூட்டிய இடத்தில் வைத்து விட்டு, இவரை உறங்கச் செய்வதும் உண்டு.

### அறிவியல் நூல்கள்

டேவிட் லிவிங்ஸ்டன் இக்காலங்களில் தமக்குக் கிடைத்த புத்தகங்கள் எல்லாவற்றையும் வாசித்தார்; ஆனால், புனைகதைகள் (நாவல்கள்) கிடைத்தால் அவற்றைக் கண்ணெடுத்தும் பாரார். இதற்குக் காரணம் இல்லாமலில்லை. 'புனைகதைகள், இன்பம் மட்டும் தருமே அன்றி வாழ்க்கையைச் செம்மை செய்வதற்கான படிப்பினைகள் தரமாட்டா' என லிவிங்ஸ்டன் நினைத்தார். அதனால்

1. Virgil. 2. Horacs

இவர், புனைகதைகளைவிடப் பல நாடுகளிலும் சுற்றித் திரிந்தவரின் விரிவுரைகளை மிக்க ஆவ லுடன் படித்தார். அறிவியல் நூல்களைப் படிப்ப திலும் இவருக்கு விருப்பம் மிக உண்டு. அந்நாளில் சமயத் தலைவர் பலர், 'அறிவியல், சமயத்துக்கு எதிரானது' எனக் கருதியிருந்தனர். இக்காரணத் தால் சமயப்பற்று மிக்க நீல் லிவிங்ஸ்டன், தன் மகன் அறிவியல் நூல்களைப் படிப்பதைக் கண் டித்து வந்தார். ஆயினும் தந்தையின் விருப்பத்தை மீறி, டேவிட் லிவிங்ஸ்டன் அவற்றைப் படித்து வந்தார். அதனால் தம் சமயப்பற்றுக்கு உறுதி ஏற்றபட்டதேயன்றிக் குறைவு ஏற்பட்டதில்லை என லிவிங்ஸ்டன் பிற்காலங்களில் கூறியது உண்டு.

## ஆராய்ச்சிப் பொருள்கள்

டேவிட் லிவிங்ஸ்டனின் பிற்கால வாழ்க்கை யில் தோன்ற இருந்த பெருமைக்கு உரிய அறி குறிகள், இவருடைய இளமைப் பருவத்திலேயே ஓரளவு காணப்பட்டன. இவர், புத்தகங்கள் பலவற்றைத் தொகுக்கத் தொடங்கினர்; தமக்கு அருமை என்று தோன்றிய பொருள்களைச் சேர்க் கத்தொடங்கினர்; அவற்றைப்பற்றிக் குறிப்புக் களும் எழுதி வந்தார். இவ்வேலைகள், ஆராய்ச்சி யாளர்க்கு மிகப் பயன்படத்தக்கன. இவரது இத் தகைய முயற்சி, சமயப் பணியையும், மருத்துவப் பணியையும் ஒருங்கே ஆற்றப் பெருதவியாக இருந் தது. இவரது இளமைக் காலத்து மக்கட்பணி ஆர் வமே, பிற்காலத்தில் தன்நலமற்ற உண்மைச் சம யப் பணியாக மாறிற்று. 'சமயப் பணி என்பது மக்கட் பணியே' என்பதை இவர் வாழ்வு நன்ருக எடுத்துக் காட்டும்.

## பெயர் பொறித்தல்

லிவிங்ஸ்டனின் இளமைப் பருவத்தில் காணப்படும் குறைபாடுகளை உற்று நோக்கினால், அவையும் இவர் உயர்வுக்கு உதவியனவே என்பது தோன்றும். சிறுபிள்ளைகள் ஊருக்கு அருகில் உள்ள 'பாத்வெல்'[1] கோட்டையில் ஏறுவதில் ஒருவருடன் ஒருவர் போட்டியிடுவதுண்டு. லிவிங்ஸ்டன், மற்றப் பிள்ளைகளைவிட மிக உயரமான இடத்திற்குத் தாவி ஏறுவார்; அங்கே தம் பெயரைப் பொறித்து மீள்வார். வாழ்வில் மற்ற எல்லோரினும் உயர்ந்த குறிக்கோள் உடையவராய் உயர்ந்து, அதனில் தம் புகழ் எழப்பொறித்த பிற்கால வாழ்க்கைக்கு, இஃது ஒரு நல்ல அறிகுறி ஆகும்.

## வீட்டு வேலை

லிவிங்ஸ்டன், தம் தாயாருக்கு உதவியாகவீட்டு வேலைகளைச் செய்வது வழக்கம். இவர் வீட்டைப் பெருக்குவதும் உண்டு. இவர் அத்தொழிலைச் செய்யப் பின்வாங்குவதில்லை. எனினும், வெளியார் காணுதவாறு வாயிற் கதவை அடைத்த பின்தான் அதனைச் செய்ய இவர் ஒருப்படுவாராம். பிறர் அவமதிப்பைப் பொருட்படுத்தும் இப்பண்பு, இவரிடம் பின்னாளில் தலைகாட்டவில்லை. அறிவுக்கும் மனச்சான்றுக்கும் ஒத்த காரியங்களைச் செய்வதில் பிறர் அவமதிப்பை இவர் தம் பிற்காலங்களில் பொருட்படுத்தியதில்லை. மக்கள் அவமதிப்பையோ பகைமையையோ பொருட்படுத்தி யிருந்தால் இயேசு, முகமது, புத்தர், இராஜாராம் மோகன்ராய் போன்றவர் உலகப் பெரியாராக இருக்க மாட்டார்களல்லவா ?

---

1. Bothwell

## 4. உயர்தரக் கல்வியும் பணியேற்பும்

### மருத்துவக் கல்வி

லிவிங்ஸ்டன், ஆலையில் தம் வேலைகளை ஒழுங்குறச் செய்ததன் பயனாக, இவருடைய 19-ஆம் ஆண்டில் நூல் நூற்போராக உயர்வு பெற்றார். இப் புதிய வேலை சற்றே கடுமையானதாக இருந்தாலும் நல்ல ஊதியம் தருவதாக இருந்தது. ஆகவே, இவர் தம் ஊதியத்தில் முன்னிலும் மிகுதியாக மிகுத்து வைத்துக் குளிர்கால விடுமுறையில் கிளாஸ்கோப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மருத்துவப் பயிற்சி வகுப்பில் சேர்ந்தார். தாம் சிறந்ததொரு மக்கட் பணி ஆற்ற அஃது உதவும் என்ற கருத்துடனேயே இவர், தம் இளமைக் காலப் பயிற்சியில் மருத்துவத் துறையையும் ஒரு கூறாகத் தேர்ந்தெடுத்தார்.

### பெரியோர் கூட்டுறவு

கிளாஸ்கோ பல்கலைக் கழகம், இவர் வேலை செய்துவந்த இடத்திலிருந்து ஏழுகல் தொலைவில் இருந்தது. குளிர்காலத்தில் இவ்வளவு தூரம் பனிக்கட்டியில் நடப்பதைத் தவிர்க்கும் எண்ணத்துடன் லிவிங்ஸ்டன் தம் குடும்பத்தினரை அழைத்துச் சென்று, அந்நகரிலேயே ஒருவீட்டில்குடியேறினார். இப் பல்கலைக் கழகத்தில் லிவிங்ஸ்டன், பண்டை நாகரிக மொழியான கிரேக்க மொழிப் பயிற்சி பெற்றார். பேரறிஞர் வார்ட்லா[1]வின் சமயச் சொற்பொழிவுகளைக் கேட்ட லிவிங்ஸ்டன், அத்துறையில் பேரார்வம் கொண்டார். பல்கலைக் கழகத்தில் அறிவியல் பேராசியராக இருந்தவர்

1. Doctor Wardlaw.

கிரகாம்[1] என்பர். அவருடன் துணைப் பேராசிரியராக இருந்த ஜேம்ஸ்யங்[2] என்பவருடன் லிவிங்ஸ்டன் நெருங்கிப் பழகி அவருக்கு உற்ற நண்பரானார். லண்டன் மருத்துவ மன்னரவைத் தலைவ[3]ரான ஜே. ரிஸ்டன் பென்னெட்[4] என்பவரும் டேவிட் லிவிங்ஸ்டனுக்கு அறிமுகமானார்.

## மருத்துவத்தில் தேர்ச்சி

லிவிங்ஸ்டன் கிளாஸ்கோவில் இரண்டாம் ஆண்டுப் பயிற்சியை மேற்கொண்டபோது, லண்டன் சமயப் பணியாளர் கழகத்தில் சேர எண்ணங் கொண்டார். இவரது விண்ணப்பம் அப்பொழுதைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே இவர், ஜோஸஃப் மூர் என்ற நண்பருடன் கழகத்தினரைக் காணச் சென்றார். கழகத்தினர் இவரை, திருத்தகை - ரிச்சர்டு ஸிஸில்[5] என்பவரை அடுத்து உதவிப்பணி ஆற்றுமாறு, ஏவினர். மூன்று மாதப் பணியின் பின் தேர்வில் இவர் ஏற்கப்படாது போகவே, மீண்டும் மூன்று மாதம் உதவிப் பணி செய்ய வேண்டுவதாயிற்று. கழகத்தார் இவரை மேற்கு இந்திய தீவுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தனர். லிவிங்ஸ்டனும் அவ்வாண்டு நடைபெற்ற மருத்துவத் தேர்வில் தேறினார்.

## ஆஃப்ரிகா செல்ல ஆர்வம்

லிவிங்ஸ்டன் மருத்துவத் தேர்வுக்காக லண்டனுக்குப் படிக்கச் சென்றபோது சேவல்[6] என்ற

---

1. Graham. 2. James Young. 3. Chairman of the Royal Medical Sociely of London. 4. J. Riston Bennett. 5. Rev. Richard Cecil. 6. Mrs. Sewell.

மாதின் வீட்டில் தங்கினர், அவ்விடத்தில் மோபட்[1] என்ற சமயப் பணியாளரைக் கண்டார். அவர் நாற்பது ஆண்டுகட்கு மேல் ஆஃப்ரிக்காவில் பணியாற்றியவர். அவர்,லிவிங்ஸ்டனுடன் நட்புப் பூண்டு, ஆஃப்ரிக்காவில் தாம் ஆற்றிய பணி பற்றிய வரலாற்றை எல்லாம் இவருக்கு விரித்துரைத்தார். இதன் பயனக லிவிங்ஸ்டனுக்கும், 'ஆஃப்ரிகா சென்று பணியாற்றவேண்டும்' என்ற அவா உண்டாயிற்று. அவ்விருப்பத்திற்குத் தக சமயக் கழகம் ஒன்று, இவரை 1840-ஆம் ஆண்டு தென் ஆஃப்ரிகாவிற்கு அனுப்ப முன் வந்தது.

## 5. தென் ஆஃப்ரிகா செல்லல்

### சமயப் பணிக்கு அர்ப்பணம்

நம் வாழ்க்கையை உருவாக்கும் செயல்கள் பல, நாம் எண்ணுமலேயே நம் முன் வருவதுண்டு. ஆயினும் நம் உள்ளத்தைச் சார்ந்த விருப்பு வெறுப்புகள் அவற்றிடையே தமக்கு உரிய திறத்தை நம்மையும் அறியாமலே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன. லிவிங்ஸ்டன், தம் கிராமத்தில் உள்ள ஒரு சமயப்பணி நிலையத்தின் கிளை மூலம் சமயப் பணியாளர் பலருடைய வரலாறுகளைப் பற்றிக் கேள்வியுற்ருர்; அவர்களுக்காகத் தம்மால் இயன்ற அளவு பொருள் உதவி செய்யவும் உறுதி செய்திருந்தார். ஆனல் சார்ஸ் கட்ஸ்லாஃப்ட்[2] என்ற சீனப் பணியாளர், 'சமயப்பணிக்குப் பன்னூறு இளைஞர் வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார். அதனை அறிந்த லிவிங்ஸ்டன், பொருள் உதவுவதுடன் அமையாமல் தம் வாழ்க்கை முழு

1. Mowbatt. 2. Charless Gutzlaft.

வதையுமே அத்துறைக் கென ஒப்படைக்கத் துணிந்தார்.

லிவிங்ஸ்டன் சிறுவயதிலிருந்தே சிறுசமய உட்பிரிவுகளைப் பாராட்டாதவர். ஆதலின் இவர், பரந்த அடிப்படையும் பொது நெறிப்போக்கும் உடைய லண்டன் சமயப் பணிக் கழகம் சார்ந்து தொண்டாற்ற முன் வந்தார். சீன நாட்டுக்குச் செல்ல எழுந்த இவர் எண்ணம், அப்போது அங்கு நடந்த அபினிப்போரால்[1] சற்றே தடைப் பட்டது. அப்போது லிவிங்ஸ்டன் மோபாட்டின் ஆஃப்ரிகப் பணியைப் பற்றிக் கேள்விப்பட்டார். ஆகவே இவர் ஆர்வத்துடன் அதனை மேற் கொண்டார். ஏழைகளுக்கு உழைப்பதே உயர்வு எனக்கொண்ட இவர், நாகரிக உலகில் ஏழ்மைப் படியிலிருந்த ஆஃப்ரிகாவில் பணியாற்ற முனைந்தது பொருத்தமுடையதே ஆகும்.

வானநூல் கற்றல்

லிவிங்ஸ்டன் 1840-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ஆம் நாளன்று இங்கிலாந்திலிருந்து ஆஃப் ரிகா செல்லப் புறப்பட்டார். இவர் பயணம் செய்த கப்பலின் பெயர் 'ஜார்ஜ்'[2] என்பது. இவர் பயணத்தின்போது அறிஞர் டோனல்டுஸன்[3] என்ப வரின் நட்பைப் பெற்றார். லிவிங்ஸ்டன், அவ்வறிஞ ரின் உதவியால் வானில் உள்ள கோள்களைக்காண வும் அவற்றின் நிலையை அளவிட்டறியும் கருவியை வழங்கவும் கற்றுக் கொண்டார். பிற்காலத்தில் பாலைவனங்களில் திசை தெரியாது செல்லவேண்டி வந்தபொழுது லிவிங்ஸ்டனுக்கு அவ்வறிவு மிகப் பயனுடையதாக இருந்தது.

1. Opium Wars in China. 3. The George, 4. Dr. Donaldson.

### பொதுநலச் சொற்பொழிவு

பயணத்தின் நடுவில் நன்னம்பிக்கை முனை[1]யில் கப்பல் ஒரு திங்கள் தங்கிவிட்டது. லிவிங்ஸ்டன் அங்கே இறங்கிச் சிலகாலம் கரையோரத்திலுள்ள வெள்ளை மக்களுடனும் நாட்டு மக்களுடனும் பழக நேர்ந்தது. அங்குள்ள குடியேற்ற மக்களின் சமயத் தலைவர் அறிஞர் ஃபிலிப்[2] என்பவர் ஆவர். லிவிங்ஸ்டன் ஒருநாள் அவருடன் கோவில் சென்று வழிபாடாற்றினார்; 'கடவுளின் கருணை உள்ளம்' என்பதைப் பற்றிப் பேசினார். மக்கள் அனைவரிடத்தும் "நன்மக்கள் ஒரே வகையான அன்பு காட்ட வேண்டும். நிறம், நாகரிகம், நாடு, கல்வி ஆகிய எவற்றாலும் மக்களிடையே வேறுபாடு காட்டக் கூடாது" என்பதே லிவிங்ஸ்டன் பேசியதன் சுருக்கமாகும். ஒரு சிலர் அப்பேச்சை வானளாவப் புகழ்ந்தனர்; வேறுசிலர் பழித்தனராம். லிவிங்ஸ்டன் வேறுபாடு அறியாமல் திகைத்தனர். சிலர் ஆஃப்ரிக மக்களை வெள்ளையருடன் ஒப்பாகக் கருதாமல் வேறுபாடு காட்டி வந்தனர். லிவிங்ஸ்டன், 'அனைவரையும் ஒன்றுபோல நடத்தவேண்டும்' எனக் கூறிய பொது உண்மை அவர்களுடைய வாழ்க்கைப் போக்கைக் குத்திக்காட்டுவதுபோல் இருந்தது. இவர், அதனைப் பின்னரே அறிந்தார்.

### குருமானில் லிவிங்ஸ்டன்

ஒரு திங்களுக்குப்பின் கப்பல் நன்னம்பிக்கை முனையிலிருந்து புறப்பட்டது; புறப்பட்ட சில நாட்களுக்குள் அல்கோ விரிகுடா[3] வந்து சேர்ந்தது. லிவிங்ஸ்டன் கப்பலினின்று இறங்கி, மாட்டு

1. Cape of Good Hope. 2. Dr. Philif. 3. B. Algoa Bay.

வண்டியில் ஏறிச் சில நாட்களில் குருமான்[1] என்ற இடம் வந்து சேர்ந்தார். இதுவே அறிஞர் மோபட், நெடுநாள் சமயப்பணி ஆற்றிய இடமாகும். அவர், லிவிங்ஸ்டனிடம் தம் வாழ்க்கையின் படிப்பினைகளை எடுத்துரைக்கையில், 'கடற்கரைப் பகுதிகளில் சமயப் பணியாளர் பலரிடையே இருந்து பணி ஆற்றுவதினும் உள் நாட்டில் பிறர் செல்லாத எல்லைவரை சென்று, புத்தம் புதிய மக்களிடையே பணிஆற்றுவதே நல்லது' எனக் கூறியிருந்தார். அந்த அறிவுரையின் உண்மையை லிவிங்ஸ்டன் விரைவில் கண்டு கொண்டார்.

## பொதுநலத்தொண்டு

லிவிங்ஸ்டனுக்கு முன் இவ்விடம் வந்து பணியாற்றியவர் பலரும், சமய உட்பிரிவுகளை மேற்கொண்டவர். அவர் தமக்குள் மாறுபட்ட கருத்தினராய், ஒருவரை ஒருவர் எதிர்த்துத் தம் கொள்கைகளைப் பரப்பினர். மேலும் அவர்கள் சமயப் பணியுடனே வாணிக, அரசியல் நலங்களையும் கலந்து செயலாற்றினர். ஆதலால் அவர், கரையோரக் குடியேற்ற மக்களின் நன்மதிப்பைப் பெறாது, அன்னாரின் அவநம்பிக்கையையே பெற்றனர். இதனை லிவிங்ஸ்டன் நன்கு அறிந்தவர். ஆதலால் இவர், 'நாகரிக வகையில் குழந்தைப் பருவத்தினரான அவர்களிடையே உயர்ந்த முறையில் உறவாடிப் புதிய இடத்தில் புதிய நிலையை உண்டு பண்ணவேண்டும்' என்று எண்ணினர். லிவிங்ஸ்டன் 'தூய அன்பை அன்பினாலும், தன்னல மற்ற உழைப்பினாலும் மட்டுமே பெறமுடியும்' என்பதைத் தம் நீண்ட பணிவாழ்வில் காட்டலானர். லிவிங்ஸ்

1. **Kuruman Station.**

டன் இக்கருத்துடன், குருமானை விட்டு உள்நாடு செல்லும் வகையில் தம்மைப் பயிற்றுவித்துக் கொள்ளத் தொடங்கினார்.

## 6. குருமான் பணிநிலையம்

### உள்நாட்டுப் பிரயாணம்

குருமான் பணிநிலையம், அல்கோ கடற்கரையிலிருந்து 700 கல் தூரம் உள்நாட்டில் விலகி இருந்தது. அத்தூரம் முழுவதும் லிவிங்ஸ்டன் மாட்டு வண்டியிலேயே பயணம் செய்ததனால், அந்நாட்டையும், நாட்டுமக்களையும் கூர்ந்து கவனிக்க வாய்ப்புப் பெற்றார். நில இயல் வகையில் அந்நாடு, லிவிங்ஸ்டனின் தாய் நாடாகிய ஸ்காட்லாந்தைப் போலவே கல்லுங்கரடுமாக மலை அடர்ந்திருந்தது.

### நாட்டு மக்கள்

மக்களும் ஒருவகையில் ஸ்காட்லாந்து மக்களையே ஒத்திருந்தனர். அவர், சூதும்வாதும் அற்றவர்; அயலவரை அன்புடன் ஏற்றுத் தோழமை கொண்டாடுபவர். ஆனால், அவர்கள் மனத்தில் சிறிதளவு ஐயம் ஏற்பட்டாலும் போதும், உடனே அவர்களின் உள்ளார்ந்த முரட்டுக் குணமும் கொடுமையும் கிளர்ந்து வெளிப்படும். சமய வகையில் அவர் பல மூட நம்பிக்கைகளை உடையவராக இருந்தனர். மந்திரவாதிகள், சூனியக்காரர்கள் ஆகியவர்களைப் பற்றிய அச்சம் அவர்களுக்கு மிக உண்டு. அவர்களிடையே மருத்துவரே மந்திரக்காரராகவும் இருந்தனர். அதனோடு அவர்களே மழையைச் சிலவகைச் சடங்குகளால் கொண்டு வரும் ஆற்றல் உடையவர்களாகவும் கருதப்பட்ட

னர். ஆகவே, லிவிங்ஸ்டனின் மருத்துவப்பணி, அவர்களிடையே செல்வாக்கு அடைவதற்கு நெடு நாட்கள் ஆயின.

## காட்டுமக்களும் உட்பிரிவுகளும்

குருமான் வரையுள்ள பகுதியில் வாழ்ந்த மக்கள் பெக்குவானர்[1] எனப்படுவர். அவ்விடம்பெக்கு வானநாடு எனப்படும். அவர் எகிப்தியரைப் போலவே பலவகை விலங்குகளை வணங்குபவராக இருந்தனர். அவர்களிடையே பல உட்பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவின் பெயர், அப்பிரிவினர் வணங்கும் விலங்கின் பெயரை ஒட்டி அமைந்த தாகவே இருந்தது. பெகுவன் (முதலையினம்), பகட்லா (குரங்கினம்), பட்லாபி (மீன் இனம்) என்பன அத்தகைய பெயர்களுட் சிலவாகும். ஒவ்வொரு பிரிவினருக்கும் சிறப்பான ஒவ்வொரு கூத்து உண்டு. அதனாலும் அவர்களைப் பிரித்தறியக்கூடும். மேலும் ஒவ்வொரு பிரிவினரும் தாம் வணங்கும் தெய்வமாகிய விலங்கைமட்டும் கொன்று உண்பதில்லை.

## நாட்டு மொழிப்பயிற்சி

லிவிங்ஸ்டன், இங்கிலாந்திலுள்ள தலைமை நிலையத்திலிருந்து வரும் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டு மூன்று மாதம் வரை குருமானில் தங்கியிருந்தார். உத்தரவு எதுவும் வரவில்லை. தாம் செல்லும் இடம் எதுவாயினும் அந்நாட்டு மக்களின் மொழி, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறிவது இன்றியமையாதது என்பதை லிவிங்ஸ்டன் அறிந்தவர். அதனால் அவர், ஐரோப்பியச் சூழ்

1. Bechuanar.

நிலையிலிருந்து முற்றிலும் விலகி இருந்த லிட்டிபர்பா[1] என்ற இடத்தில் சென்று அங்கே பயிற்சி பெற லானார். ஐரோப்பியத் தொடர்பு இல்லாமல் பயின்ற தன் பயனாக மிகவிரைவிலேயே அந்நாட்டு மொழியிலும், பழக்க வழக்கங்களிலும் தேர்ச்சி உடையவரானார். அதனால் நாட்டுமக்களுள் தாமும் ஒருவர், என்ற நிலைமை யடைந்தார்.

## தொண்டிற்கு இடைஞ்சல்

லிவிங்ஸ்டனுக்கு முன் ஆஃப்ரிகாவில் சென்று குடியேறின வெள்ளையர் பலர், அந்நாட்டுமக்களை மிக இழிவாக நடத்திவந்தனர். அதனால், இரு சாராரிடையும் தப்பெண்ணமும் பகைமையும் ஐய மனப்பான்மையும் மிகுந்திருந்தன. இவை, தொடக்கத்தில் லிவிங்ஸ்டனையும் தாக்கின. எனினும் லிவிங்ஸ்டனின் நேர்மை, பெருந் தன்மை முதலிய குணங்கள், பலரை இவருக்கு நண்பராக்கின. லிவிங்ஸ்டன் பணியைக்கண்டு பொறாமை உள்ளம் படைத்த வெள்ளையர் சிலரும், நாட்டு மக்களிடையே மருத்துவராக இருந்த சிலரும் இவருக்கு எதிரிகளாயினர். அவர், லிவிங்ஸ்டன் செய்த பணியை வெறுத்தனர். லிவிங்ஸ்டனைப் பற்றியும் இவர் செய்யும் பணியைப் பற்றியும் உள் நாட்டில் தவறான கருத்துக்களைப் பரப்பினர். இக்கருத்துக்கள் வேரூன்றிப் பரவுவதன் முன்பே மக்களிடம் நேரடியான உறவு ஏற்படுத்திக் கொள்ள லிவிங்ஸ்டன் விரும்பினார். இவர் முதலில் லிட்டிபர்பாவில் குடியேற ஏற்பாடு செய்திருந்தார்; இக்கருத்துடனேயே குருமானுக்கும் வந்தார். ஆனால் அங்குள்ள

1. Littiberba.

பக்குவானர்களைப் 'பாரலாஸ்' என்ற வகுப்பினர் எதிர்த்துத் துரத்திவிட்டனர். இச் செய்தி லிவிங் ஸ்டனுக்கு எட்டிற்று. அதனால், வேறு இடம் பார்க்கவேண்டிய நிலை எற்பட்டது.

## அனாதைப் பெண்

லிவிங்ஸ்டன், வண்டி ஒன்றின் துணை கொண்டு குருமானுக்குத் திரும்பினார். இவருடன் நாட்டுமக்கள் சிலரும் பயணம் செய்தனர். அவர் பயணம் செய்த வண்டியின் பின், பதினொன்று, அல்லது பன்னிரண்டு வயதுடைய பெண் ஒருத்தி தொடர்ந்தாள். அவள் தன் தமக்கையின் ஆதர வில் வாழ்ந்தவள். தமக்கை இறக்கவே அவள் துணையற்றவளானாள். வேறு குடும்பத்தார் அவளைக் கைக்கொண்டனர்; அக்குடும்பத்தார் அவளை அடி மையாக விற்கவும் முடிவு செய்தனர். இத் தீய எண்ணத்தை அறிந்த அந்நங்கை, அவர்கள் பிடியி னின்றும் தப்ப முயன்றாள், வழியில் வண்டியைக் காணவே, வண்டியிலுள்ளோர் உதவியைப் பெற லாகும் என்ற நம்பிக்கையாலே பின் தொடர்வாளா யினாள். ஆனால், அவளுடைய ஆண்டான் (எஜமா னன்) பின்தொடரவே, அவள் வெறிநாய் கைப்பட்ட பூனைக்குட்டிபோலக் கதறினாள். லிவிங்ஸ்'-னுடன் நாட்டுமக்கள் பலர் பயணம் செய்தனரன்றோ? லிவிங்ஸ்டன், அவருள் ஒருவன் உதவியால், அப் பெண் அணிந்திருந்த பாசி மணி முதலியவற்றை விற்றுக் கொடுத்து, அவளை மீட்டார்.

## நீர் வசதி அமைத்த வகை

லிவிங்ஸ்டன் புதிய குடியேற்றத்திற்கான இடம் பார்த்து, அங்கே பயிரிடுவதற்கு வேண்டும்

நீர்வசதிகளை ஏற்படுத்த எண்ணினார். அங்குள்ள மக்கள், வானம் பார்த்து மழை வருவிப்பதொன்று தவிர நீர் வேட்கையைத் தீர்க்க வேறு வகை அறியாதவர். எனவே லிவிங்ஸ்டனுக்கு அத்தகைய நாட்டுமக்களிட மிருந்து உதவி பெறுவது அரிதாக இருந்தது. லிவிங்ஸ்டன் செய்த இனிய சூழ்ச்சி ஒன்று இவ்வகையில் பெரும்பலன் தந்தது. நாட்டு மருத்துவர், மருந்து தருவது மட்டும் அன்றி, மழையையும் அழைக்கும் தன்மையுடையவர் என்பதை முன்னே கண்டோம். அவர்களைப் போலவே லிவிங்ஸ்டன். "நானும் மழையை அழைக்கப் போகிறேன்" என்றார். உடனே யாவரும் அதற்கான செய்வினை (சடங்கு)களுக்கு உதவ முன் வந்தனர். லிவிங்ஸ்டன் நயமாக, "எங்கள் நாட்டில் நாங்கள் மழை வருவிக்கச் செய்யும் செய்வினை, கால்வாய் வெட்டுவதே" என்றார். மருத்துவர் இதுகேட்டுப் புன்னகை செய்த போதிலும் யாரும் மனம் நோகவில்லை. மக்களும் உடன் நின்று உழைத்தனர்.

## "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்"

நாட்டு மக்களிடையே நன்மதிப்புப் பெறும் வகையில் லிவிங்ஸ்டன் அவர்கள் மொழியில் பெற்றிருந்த பயிற்சி, சிறந்த பயனுடையதாக இருந்தது. லிவிங்ஸ்டன் அந்நாட்டுமொழியை நன்கு அறிந்தவர் என்பது தெரியாத சிலர், இவருடைய வெளிறிய—ஒடுங்கிய உடலைக்கண்டு, "இவர் வலுவற்றவர்; சமயம் வாய்த்தபோது இவரை அடக்கி விடலாம்" எனப் பேசிக்கொண்டனர். லிவிங்ஸ்டன், அவர்கள், தம் தவறுதலைத் தாமே அறியும் வண்ணம் நெடுந்தொலைவு தம் முழுஆற்றலைக் காட்டி, விரைந்துநடந்தார். இவர் மீது வசைபேசிய மக்கள்,

இவரைப் பின்பற்றி நடக்க முடியாமல் நாய்போல இளைத்தனராம்!

## இனத்தலைவரது நட்பைப் பெறுதல்

பெக்குவானரின் தலைவர் செசில்[1] என்பவர். அவர் முதலில் லிவிங்ஸ்டனின் சமயப் பணியை வன்மையாக எதிர்த்தார்; ஆனால், பிறரால் குணம் அடையாத பலர் லிவிங்ஸ்டனின் மருத்துவப்பணி மூலம் குணம் அடைவதைக் கண்டு மனம் மாறி, இவர் வயப்பட்டார். ஒரு சமயம் செசிலின் குழந்தை நோய்வாய்ப்பட்டது. அதனால் அவர், பெருங்கவலை உற்றார். லிவிங்ஸ்டன் மிக எளிதாக அதனைக் குணப்படுத்தினார். பின்னரே அத்தலைவர், லிவிங்ஸ்டனுடன் நிலைத்த நட்புக்கொண்டார்.

## நல்ல உபதேசம்

பெக்குவானர் 'கைக்குக் கை, உயிர்க்கு உயிர்' என்ற ஒழுக்க முறையில் திளைத்தவர்.

> "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்."

என்று கூறிய திருவள்ளுவர் நெறியை ஒத்தது இயேசுநாதர் நெறி. எனவே, லிவிங்ஸ்டன் கூறிய இயேசு பெருமான் பொன்னுரைகளைக் கேட்டு அவரெல்லாம் ஒன்றும் தோன்றாதவராயினர்; குழந்தைகள் போல் கேள்விகள் கேட்டனர்; மாறி மாறிக் குழப்பமும், வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்தனர். லிவிங்ஸ்டன் சில நாளுக்குள் அவர்கள் மொழியில் விவிலிய நூலின் பகுதிகளை மொழி

1. Sechele.

பெயர்த்ததுடன், வணக்கமுறையில் பாடல்களும் இயற்றலானார்.

1843-ஆம் ஆண்டு ஜூனில் 'குருமானிலிருந்து உள்நாட்டுக்கு ஏகலாம்' என்ற உத்தரவு சமய சங்கத்திலிருந்து வந்தது. அதனைக் கண்ட லிவிங்ஸ்டன் எல்லையிலா மகிழ்ச்சியுடன் புறப்பட்டார்.

## 7. அரிமா வேட்டை

### எச்சரிக்கைக் கடிதம்

லிவிஸ்டன் தன் சமயப் பணிக்கு நிலைக்களமாகத் தேர்ந்த இடம் 'மபோட்ஸா'[1] என்பதாகும். இத்தேர்வுபற்றி இவர் தம் நண்பர்களுக்கு எழுதி, அவர்களின் அறிவுரைகளை எதிர்நோக்கி இருந்தார். லிவிங்ஸ்டன் நன்னம்பிக்கைமுனைக்குவரும்போது, அறிஞர் ஃபிலிப் என்பவரை அங்கே கண்டாரன்றே? அவரே ஆஃப்ரிகாவில் சமயக் கழகத்தின் செயலாளராக[2] இருந்தவர். அவர் தற்செயலாகக் குருமானுக்கு வந்தார். அச்சமயம் லிவிங்ஸ்டன் இட ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தொலைதூரம் சென்றிருந்தார். அறிஞர் ஃபிலிப், லிவிங்ஸ்டன் திரும்புவதற்குள்ளாகப் போகவேண்டியவரானார். எனவே அவர், லிவிங்ஸ்டனுக்கு ஒரு குறிப்பு எழுதி வைத்துச் சென்றார். "எக்காரணத்தாலும் மபோட்ஸாவில் குடியேறுவது நன்றன்று. அச்செயல், எரிமலையின் எரிவாயில் வீடு அமைத்து வாழ்வது போலாம். ஏனெனில் அதனை அடுத்து 'மொகோலொலோ'[3] என்ற குழுவின் தலைவனை 'மோஸில் காட்ஸே'[4] என்பவன் இருக்கின்றான். அவன் மிகக் கொடியவன்; வெள்ளையர் குருதியை உண்ணக்

1. Mabotsa. 2. Agent. 3. Mokololo. 4. Mosil.katse.

காத்திருப்போன்'' என்பதே அவர் குறிப்பில் எழுதிய செய்தியாகும். லிவிங்ஸ்டன் திரும்பிய காலையில் இச்செய்தியைக் கண்டு அஞ்சினரல்லர். பிறகு உசாவி, அஃது அவ்வளவு உண்மை யன்று எனக் கண்டார். மாபோட்ஸாவில் பெக்குவானர் வகுப்பைச் சேர்ந்த பகட்லாக்களே[1] வாழ்ந்தனர். அவர் மொகோலொலோக்களைப் போல் கொடியவர் அல்லர்; மேலும் அவர்கள் பெக்குவானர்களிலும்சிறிது வீரங் குறைந்தவர்களே யாவர் என்பதை லிவிங்டன் பின் நாட்களில் அறியலானர்.

### துணைவர் இருவர்

1843-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் லிவிங்ஸ்டன் குருமானிலிருந்து புறப்பட்டு மபோட்ஸாவுக்குப் பயணம் தொடங்கினர். அப்போது இவருடன் வேறு வெள்ளையர் இருவர் அவ்விடத்தைநாடிச் சென்றனர். அவர், திரு பிரிங்கிள்[2] ஸர்தாமஸ்ஸ்டீல்[3] என்பவராவர். அவர் இருவரும் கேளிக்கைகளில் பேரும் புகழும் பெற்றவர்; நம் நாடாகிய இந்தியாவில் பலநாளிருந்து அதனை நன்கு அறிந்தவர். அவருள் ஸ்டீல், படைத்தலைவராக இருந்தவர்; பிற்காலத்தில் படைமுதல்வர் ஆனவர். அவருடன் லிவிங்ஸ்டன் நெருங்கிய நட்பு உடையவரானர்.

### எளிய வாழ்க்கை

லிவிங்ஸ்டன் ஆஃப்ரிகருடன் நெருங்கிப் பழகியதனல் இவர் பணிக்கு, இரண்டு தனிப்பட்ட நன்மைகள் ஏற்பட்டிருந்தன. அவருடைய மொழியை ஆஃப்ரிக நாட்டு மகன் ஒருவனைப்

1. Bakatlas. 2. Mr. Pringle. 7. Sir Thomas Steele.

போலவே இவர் பேசப் பயின்றது ஒன்று; ஆஃப்ரிக நாட்டு நிலைக்கு ஒத்த அந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைக் கைக் கொண்டமை மற்றொன்று. இவருடன் வந்த மற்ற ஆங்கிலேய நண்பர் எல்லாம் ஆரவாரமாகப் பல குதிரைகள், கூடாரங்கள், மூட்டை முடிச்சுக்கள், உணவுப் பொருட்குவைகள் முதலியவற்றை உடன் கொண்டு வந்தனர். இதனால் அவர்கள் பயணத்தில் அடைந்த தொல்லை பெரிதாகும். லிவிங்ஸ்டனோ எளிய ஆடையும், ஒரு கட்டை வண்டியும் உடையவராய், வேறு எவ்வகைச் சுமையும் இல்லாமல் கைவீசிச் சென்றார். ஆஃப்ரிக மக்களைப்போல் இவருக்கும் நிலப் பரப்பே படுக்கையாகவும் வான மண்டலமே கூரையாகவும் காற்றே போர்வையாகவும் பயன் பட்டன. 'மக்களுக்குப் பணி செய்வோர் இன்பவாழ்வு தேடுவது, தம் பணிக்குக் கால்கட்டு கைக்கட்டுகளைத் தேடிக்கொள்வதே ஆகும்' என்பதை லிவிங்ஸ்டன் உணர்வார். ஆதலின் இவர் எளிய வாழ்க்கையையே மேற்கொண்டார்.

பயணத்திடையே இராக்காலங்களில் அங்கங்கே தங்கி, மறுநாள் செல்வதே லிவிங்ஸ்டனின் வழக்கம். இவர் எங்கெங்குத் தங்குகின்றாரோ ஆங்காங்குள்ள மக்களின் உதவி கொண்டு வண்டி மாடுகளை அவிழ்த்து விடுவார். மரத்தடியிலும் ஒதுக்கிடங்களிலுமே தங்குவார். லிவிங்ஸ்டன் அந் நாட்டுமக்களுடனிருந்து விறகு சேர்த்துச் சமைத்து உண்டு உறங்குவார்; அம்மக்களுடன் ஒருவராகக் கலந்து உறவாடுவார். இதனால் அவர் எல்லாம், வேலைக்காரர் என்ற முறையில் உழைக்காமல் நண்பர் என்ற முறையில் ஆர்வத்துடன் உழைத்தனர்.

## சிங்கங்களின் தொல்லை

லிவிங்ஸ்டன் இவ்வண்ணம் மக்களுடைய அன்பையும் ஆதரவையுங்கொண்டு மபோட்ஸாவை அடைந்தார். அங்கும் இவர், பெரும்பாலும் பிறர் உதவியின்றித் தமக்கு ஒரு சிறு குடிலைக் கட்டிக் கொண்டார். அவர் அங்கே மூன்று ஆண்டுகள் கழித்தார். அவர் வாழ்ந்த பகுதியைச் சுற்றிச் சிங்கங்களின் தொல்லை பெரிதும் உண்டு. அங்கு வாழ்ந்த பகட்லாக்களின் ஆடுமாடுகளுக்கும் பயிர்களுக்கும் அவற்றால் பேரழிவு ஏற்பட்டது; சில சமயம் மக்கள் உயிர்க்கும் சேதம் உணடாயிற்று. லிவிங்ஸ்டன் இத் தொல்லையை நீக்கும் முயற்சியில் முனைந்தார்.

ஆஃப்ரிகப் பகுதிகளில் நன்கு ஊடாடிய லிவிங்ஸ்டன், சிங்கங்களின் இயல்புகளை நன்கு உணர்ந்து கொண்டார். அந் நாட்டுச் சிங்கங்கள் பெரும்பாலும் கூட்டம் கூட்டமாகவே செல்லும். ஒரு சிங்கம் எங்காவது கொல்லப்பட்டால் கூட்டம் முழுமையுமே அவ்விடம் விட்டு அகன்றுவிடுமாம். எனவே லிவிங்ஸ்டன், 'சற்று ஆண்மையுடன் ஒன்றைத் தாக்கி அழித்தால் போதும், இத் தொல்லையிலிருந்து மக்களை விடுவிக்கலாம்' என்று கண்டார். ஆனல், மற்ற பெக்குவானர் வகுப்புகளுக்குள்ள அஞ்சாமையும் வீரமும் பகட்லாக்களுக்கு இல்லை. அவர் அடிக்கடி சிங்கக் கூட்டத்தைச் சூழ்ந்து முற்றுகை செய்தனர். எனினும் தனிமையாய்ச் சிங்கம் எதிர்பட்டபோது அதனை எதிர்த்துத் தாக்கத் தயங்கி அதனைத் தப்பவிட்டு வந்தனர். அவர் லிவிங்ஸ்டனுடன் சிங்கக்கூட்டம் ஒன்றை ஒரு குன்றில் வளைத்து நின்றனர்; அப்போதும் சிங்கங்களை வழக்கம்போல் தப்பிச்

செல்ல விடுத்தனர். அதனைக் கண்ட லிவிங்ஸ்டன், தாமே தனிப்பட்டவகையில் ஒரு சிங்கத்தை எதிர்க்க முயன்றார்.

## அரிமா வேட்டை

'மபால்வே'[1] என்பவர் ஓர் ஆஃப்ரிகப் பள்ளி ஆசிரியர். அவர் லிவிங்ஸ்டனுடன் இருந்தார். லிவிங்ஸ்டனும் அந்த ஆசிரியரும், வேட்டையிற் பயிற்சியுடைய மற்றும் சிலருடன் சேர்ந்து அங்கே தப்பி ஓட முயலும் சிங்கங்களைத் தாக்க வேண்டும் எனப் புறப்பட்டனர்; அப்போது ஒரு பாறையின் மேல் உள்ள புதர் மறைவில் ஒரு பெரிய சிங்கம் மறைந்திருப்பதைக் கண்டனர். மபால்வே அதனைச் சுட்டார். ஆனால், துப்பாக்கிக் குண்டு பாறைமீது பட்டுத் தெறித்தது. சிங்கம் சீற்றத்துடன் குண்டுபட்ட இடத்தில் ஓங்கி அறைந்தது; பின், வளைத்து நின்ற வரிசையைப் பிளந்து கொண்டு ஓடிற்று. பகட்லாக்கள் வழக்கம்போல் வழிவிட்டனரே அன்றி, அதனைத் தடுக்கவோ தாக்கவோ முயலவில்லை. மீண்டும் ஒரு முறை இரண்டு இரண்டு சிங்கங்கள் வந்தன. ஆனால், பக்கத்தில் சூழ்ந்து நின்ற ஆட்கள்மீது பட்டுவிடுமே என்ற அச்சத்தினால் லிவிங்ஸ்டனும் நண்பரும் அவற்றைச் சுடவில்லை.

முடிவில் அனைவரும் ஊரை நோக்கித் திரும்பினர். அவ்வழியில் மற்றொரு சிங்கம் பாறை அருகில் புதரின் பின்பக்கமாகத் தென்பட்டது. லிவிங்ஸ்டன் தம் கையிலிருந்த இரு தோட்டாக்களை நிரப்பிச் சுட்டார். "வேட்டுத்தவறவில்லை; விழுந்தது சிங்கம்"[2] என்ற குரலுடன் அனைவரும் சிங்கத்தை

1. Mabalwe.

அணுகினர். இதற்கிடையில் லிவிங்ஸ்டன் சுட்ட மூன்றாவது குண்டும் சிங்கத்தைத் துளைத்தது. ஆயினும் அதன் அருகில் அவர்கள் சென்றபோது மூன்று குண்டுகளை ஏற்றும் அது சாகாமல் வெகுளியுடன் நின்றது. அதன் தோற்றம், போர் அரங்கில் வெறியுடன் நிற்கும் மல்லன் தோற்றத்தை ஒத்திருந்தது. லிவிங்ஸ்டன் வெறுமையாய் விட்ட தம் துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பிய வண்ணம், "சற்றுப் பொறுங்கள், சுடுகிறேன்" என்றார். அதற்குள் சிங்கம் வாலைச் சுழற்றிக்கொண்டு பெரு முழக்கத்துடன் லிவிங்ஸ்டன்மீது பாய்ந்தது. சிங்கத்தின் வலது முன்கால், லிவிங்ஸ்டன் தோள்மீது தன் முழுவன்மையுடன் ஓங்கி வீழ்ந்தது. சிங்கமும் லிவிங்ஸ்டனும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து உருண்டு உயிருக்குப் போராடினர். ஒரு முறை, சிங்கத்தின் அடி இவர் பிடரியில் வீழ்ந்து இவரை உணர்விழக்கச் செய்தது.

## வேட்டையின் பலன்

ஏறத்தாழ முப்பது முழத்தொலைவில் நின்றிருந்த மபால்வே இரு முறை சிங்கத்தைச் சுட்டார். குறிதவறிற்று. ஆனால் அதன் பயனாகச் சிங்கம் தன் பிடியுள் இருந்த லிவிங்ஸ்டனை விட்டு விட்டு மபால்வேமீது பாய்ந்தது. முன் ஒருகால் லிவிங்ஸ்டனால் உயிர்காக்கப் பெற்ற வீரன் ஒருவன் இச்சமயம் ஈட்டியால் சிங்கத்தின் விலாவில் தாக்கினான். சிங்கம் மபால்வேயையும் விட்டு அவன் மீது பாயலாயிற்று. ஆனால் இதற்குள் சிங்கத்தின் வல்லமை குன்றிவிட்டது. முன்பு குண்டுகள் துளைத்த காயத்திலிருந்து பெருகிய குருதியாலும், தன் தாக்குதல் வேகத்தாலும் அது சோர்வடைந்து

வீழ்ந்து இறந்தது. இச் சிங்கம் இறந்து விழுந்ததைக் கண்ட பிறகு சிங்கங்கள் அப்பக்கம் நாடாது அகன்றன. இச் சிங்க வேட்டையில் யாரும் உயிர் இழக்கவில்லை. ஆயினும் சிங்கத்தின் வலிய நகங்களாலும் நச்சுப்பற்களாலும் இருவர் படுகாயம் அடைந்தனர். அவருள் லிவிங்ஸ்டனும் ஒருவர். இவருடைய தோள்பட்டை எலும்புகள் சுக்கு நூறுயின. சிங்கத்தின் பற்கள் ஊடுருவியதால் அடிக்கடி வலி ஏற்பட்டது. ஆயினும், இவர் வேட்டைக்காக அணிந்திருந்த தோல் கச்சை, பற்களின் நஞ்சுபடாமல் காத்தது. எனவே, லிவிங்ஸ்டன் பூட்டற்றுத் தொங்கிய கையுடன் தப்பினர். மற்றவரோ அத்தகைய பாதுகாப்பு அற்று இருந்ததனல் ஆண்டு தவருமல் நச்சுக் காய்ச்சலுக்கும் நச்சுவலிக்கும் ஆளாகித் துன்புற்றனர்.

## 8. மண வாழ்க்கை

### காதல் மணம்

1844-ஆம் ஆண்டில் அறிஞர் மோபட் மறுபடியும் குருமானுக்கு வந்து தங்கினர். லிவிங்ஸ்டன் அவரையே ஞான குருவாகக் கொண்டிருந்தார். ஆதலால் இவர், தம் குருவின் குடிலுக்கு அடிக்கடி செல்வார். அச்சமயம் மோபட்டின் மூத்த புதல்வியரான மேரியை லிவிங்ஸ்டன் கண்டு பழக நேர்ந்தது. லிவிங்ஸ்டனின் வீரப்புகழ் மேரியின் மனத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை, அவ்வம்மையார், 'ஆங்கிலேயப் பெண்மணி எவருக்கும் அத்தகைய வீரவாழ்வில் பங்குகொள்வதைவிட உயர்ந்த பேறு வேறு இல்லை' என நினைத்தார். லிவிங்ஸ்டனும், அம்மையாரின் அடக்கம், குணம்,

அறிவுப் பயிற்சி ஆகியவற்றை நோக்கி, அவரிடம் மாறுப்பற்று கொண்டார். ஒருநாள் மாலை, மேரி தம் கையால் நீர் வார்த்துக் காத்த சிறு பூஞ்சோலை யில் இருவரும் உலவச் சென்றனர். அப்போது அவரவருடைய மனத்தில் தனித்தனி உலவிய எண்ணங்கள் அவர்களின் உரையாடல் மூலம் ஒன்றுபட்டுக் கலந்தன. அறிஞர் மோபட்டும் அவருடைய காதலை இனிது வரவேற்றதனால், அவர் விரைவில் மணவாழ்க்கை என்னும் தேரில் பூட்டப் பெற்றனர்.

### நல்வாழ்வு

வாழ்க்கைத் துணைவர் இருவரும் மபோட்ஸா வில் ஓராண்டு தங்கினர். லிவிங்ஸ்டன் இதுவரை வெறுஞ் செங்கல் கொண்டு காட்டிய மனக்கோட் டைகள் திருவாட்டி லிவிங்ஸ்டனின் மூலம் சுண்ணும் பும் காரையும் கலந்து கட்டிய உறுதியுடைய கோட் டைகள் ஆயின. மோபட் பலநாள் ஆப்பிரிகா வில் வாழ்ந்து, அந்நாட்டில் பழகியவர். அச்சமயப் பணியாளரின் செல்வியாரது ஒத்துழைப்பினால், லிவிங்ஸ்டன் வாழ்வு, துன்பத்திடையும் இன்பம் பெற்று, நிறைவும் நற்பயனும் உடையதாயிற்று.

## 9. ஸெச்சில் மனமாற்றம்

### இடம் மாறுதல்

லிவிங்ஸ்டன் இனவேறுபாடு, நிறவேறுபாடு, வகுப்பு வேறுபாடு ஆகிய எல்லா வேறுபாடுகளை யும் கடந்த பரந்த அருள் உள்ளம் படைத்தவர். ஆதலால் இவரது சமயப்பணி, பிற பணியாளர் பணியைப்போல் ஆள்திரட்டி ஆட்சி வன்மை

கோலும் பணியாக அமையவில்லை. இவர் இயேசு பெருமானின் பேரால் வெள்ளையர் உயர்வை நிலைநாட்ட முனைந்திருந்தால், நாட்டு வேற்றுமை, மொழி வேற்றுமை ஆகியவற்றையும் பொருட்படுத்தாமல் டச்சுக்காரர், ஜெர்மானியர் முதலிய பல்வேறு வகையினரான பிற பணியாளர் இவரை ஓரளவு ஆதரித்திருப்பர். இதுவன்றி இவர், ஆங்கில உயர்வுக்காகப் பாடுபட்டிருப்பினும் இவரை ஓரளவே அவர் எதிர்த்திருப்பார். ஆனால் இவர் எந்த மனித வகுப்பின் ஆட்சியையும் உறுதிப்படுத்த விரும்பினார் அல்லர்; உண்மையாகக் கடவுள் ஆட்சியை, உலக ஒப்புரவு ஆட்சியை நிலைநாட்டவே முயன்றார். இச்செயலே பிற பணியாளர்க்கெல்லாம் வயிற்று நோவை உண்டாக்கிற்று. எனவே, சமயப் பணிக் கழகத்தினர் பலர் லிவிங்ஸ்டனோடு முரண்பட்டனர். ஆதலால், லிவிங்ஸ்டன், அவர்கள் தொல்லைகளினின்றும் விடுபடும் எண்ணத்துடன், மேலும் உள்நாடு நோக்கிப் பயணப்பட்டார்; மபோட்ஸாவிலிருந்து புறப்பட்டு அதற்கு நாற்பது கல் வடக்கிலுள்ள "சோனுவேன்"[1] என்னும் இடத்திற்குச் சென்றார்.

### பலவேலைகள்

அவர் அங்கும் மபோட்ஸாவைப் போலவே வாழ்க்கைக்கு உரிய எல்லா வசதிகளையும் தொடக்கத்திலிருந்தே செய்யவேண்டியவரானார். லிவிங்ஸ்டன் அங்குத் தம் வாழ்க்கையைப் பற்றித் தம் கைக் குறிப்பேட்டில் வரைந்துள்ள செய்தி, சுவை தருவதாகும். "கட்டடவேலை, தோட்டவேலை, செருப்புத் தைத்தல், மருத்துவம், கன்னன்வேலை, தச்சு

1. Chonuane

துப்பாக்கி திருத்துதல், கொல்லுலே வளர்த்தல், வண்டி செப்பனிடுதல், சமயச் சொற்பொழிவு, பள்ளிப் போதனை, அறிவு நூல் புகட்டுதல் முதலியனவும் மாணவரான இரண்டு மூன்று பேர்க்குப் பேருரை ஆற்றுதலும் என்நேரத்தைப்பங்குகொள்கின்றன.......என் வாழ்க்கைத் துணைவி அதே சமயத்தில் மெழுகு வர்த்திகள் செய்தல், சவுக்காரம் செய்தல், ஆடை நெய்தல் முதலியவற்றில் ஈடுபட்டிருப்பாள். இவ்வகையில் ஆஃப்ரிகச் சமயப் பணிக்கான ஒரு குடும்பம் என்ற நிலையை நாங்கள் வண்மையுடன் ஆற்றினேம்—அஃதாவது, வெளி வேலைகளில் கதம்ப வேலையாளாகக் கணவனும், வீட்டு வேலைகளில் அவியல் பணியாளாய் மனைவியும் அமைந்தோம்''.

## ஸெச்சீல் மதமாற்றம்

சோனுவேனில் வாழ்ந்த பெக்குவானர்களின் தலைவர் ஸெச்சீல் என முன்னர்க் கூறியுள்ளோம் அல்லவா? அவரே `லிவிங்ஸ்டன் சமய போதனையை ஏற்ற முதல் தோழர் ஆவர். இயேசுநாதரின் நல்லுரைகளுக்குச் செவிதந்த சில நாட்களுக்குள்ளாகவே அவர், லிவிங்ஸ்டன் மொழி பெயர்த்திருந்த விவிலிய நூலைக் கற்கவும் தொடங்கினர். அவரது குழந்தைஉள்ளம் புதுமை ஆர்வத்தால் புதிய சமயத்தை ஆத்திரத்துடன் விழுங்க முயன்றது. எனினும் அதனைச் செரித்துக் கொள்ள முடியாது அது திகைத்தது. பழமை வாசனை, எதிர் பாராத் தடைகளை உண்டாக்கிற்று. சூழ்நிலையாலும் பல இடையூறுகள் ஏற்பட்டன. இவற்றுள் முதன்மையானது, கிறிஸ்து நெறியை ஏற்றதனுல் அவர் தாம் முன் மணந்திருந்த பன் மனைவியருள் ஒருத்தி

நீங்கலாக ஏனையோரை அகற்றவேண்டி நேர்ந்ததே யாம். அவருள் பலரும் பெக்குவானரிடையே முதற் குடியில் தோன்றியவர்களாதலால், ஸெச்சீல் அக் குடிகளின் உள்ளார்ந்த வெறுப்புக்கு ஆளானர்.

## நாட்டு மக்கள் துன்பநிலை

லிவிங்ஸ்டன் குடியேறியபின் அப்பகுதியில் கருப்பு தோன்றி நீண்டநாள் மழை பெய்யாதிருந் தது. 'இக்கருப்பு, மக்கள் பழைய நெறியைவிட்டு லிவிங்ஸ்டன் வணக்க முறையை ஏற்றதனுல்தான் ஏற்பட்டது' எனப் பெக்குவானர் எண்ணினர். மழையில்லாமல் நாடு வறண்ட காலங்களில் தலை வன் மழையைச் செய்வினைகளால் வருவிப்பது அந் நாட்டு வழக்கம். ஸெச்சீலோ, புதிய சமயக் கட்டுப் பாட்டினுல் அதனைச் செய்ய முடியாதவரானுர். மக் கள் அனைவரும் லிவிங்ஸ்டன் காலில் விழுந்து ஒரு முறையேனும் ஸெச்சீலைத் தம் நச்சுக் கட்டுப் பாட்டிலிருந்து விடுவித்துத் தமக்கு உயிர் தருவிக் கும்படி கண்ணீரும் கம்பலையுமாகக் கெஞ்சினர். என்செய்வார் லிவிங்ஸ்டன்! இவர் சமய உறு திக்கு, இதுபோன்ற பரிதாபமான சோதனை என் றும் ஏற்பட்டதில்லை.

## கல்வி அளித்தல்

இவ்வளவு நெருக்கடியிலும் லிவிங்ஸ்டன் மன முடையாமல் தம் பணியைத் தளாது வளர்த்தே வந்தார்; நாட்டு மக்கள் பலரை ஆசிரியராகப் பயிற்றுவித்தார்; அவர்களைக்கொண்டே நாட்டு மக்களிடையே கல்வியைப் பரப்பினர். இதுவே, லிவிங்ஸ்டன் இவ்விடத்தில் ஆற்றிய தொண்டுகளில் தலை சிறந்தது.

## புதிய தொல்லை

லிவிங்ஸ்டனுக்கு மற்றொரு துறையில் ஏற்பட்ட துயரம், இத்துயர்களை யெல்லாம் மறக்கச் செய்யத் தாக இருந்தது. டச்சுக்காரரான பூயர்கள், லிவிங்ஸ்டன் குடியேறிய பகுதிமுதல் கீழ்க் கடற்கரைவரை பரவி இருந்தனர். அவர் பொதுவாக ஆங்கிலேயருடைய முறைகளையும் லிவிங்ஸ்டனுடைய முறைகளையும் வெறுத்தனர். ஏனெனில் அவற்ருல் நாட்டுமக்கள் அறிவும் ஒற்றுமையும் வன்மையும் பெற்று, வெள்ளையர்க்கு அடிமையாக வாழ்வதில் வெறுப்புறுவர் என்று அவர் எண்ணினர். லிவிங்ஸ்டன் பணி முதிர்ச்சி பெறுமுன் அவர் முன்னேறித் தாக்கிப் பெக்குவானரைச் சூறையாடத் திடித்து நின்றனர். லிவிங்ஸ்டன், பீயர் தலைவரான குருகரைக்[1] கண்டு நிலைமையைச் சிறிதளவு தளர்த்தினர். எனினும் மேன்மேலும் வளர்ந்து வரும் பொருமைப் புயலுக்கு ஓய்வு காணமுடியவில்லை.

## இடம் மாற முயற்சி

இவ்விடரினின்றும் தப்புவது எங்ஙனம் என லிவிங்ஸ்டனும் நண்பரும் ஆராய்ந்தனர். தெற்கிலும் கிழக்கிலும் போக வழியில்லை; அங்கே பூயர்களும் பிற வெள்ளையர்களும் நிலைபெற்றிருந்தனர். வடக்கிலும் மேற்கிலுமோ, இயற்கை அன்னையின் சீற்றமே உருவெடுத்தாற் போன்ற **கலஹாரிப் பாலைவனம்**[2] கடலினும் பரக்கக் கிடந்தது. இந்நிலையில் யாது செய்வது? கலஹாரி கடந்தால் ஓர் அகன்ற நல்ல ஏரியும், அதனைச் சூழ நல்ல இளம் பாலைநிலமும் உண்டு என, லிவிங்ஸ்டன் பிறர் சொல்லக்கேட்

1. Kruger. 2. Kalahari desert,

டனர். எனவே இவர் அங்குக் குடியேறி வாழ வாய்ப்பு உண்டோ என்பதை ஆராயப் புறப் பட்டார்.

## 10. கலஹாரிப் பாலைவனம்

### கலஹாரிப் பாலைவனம்

உலகத்தில் உள்ள பாலைவனங்களுள் பரப்பி லும் சூட்டிலும் முதன்மை உடையவை வட ஆப்பிரி காவில் உள்ள ஸஹாராவும், மேலை ஆசியாவிலுள்ள அரேபியாவும், வடமேற்கு இந்தியாவிலுள்ள தார் பாலைவனமுமே ஆகும். இவற்றினும் வெம்மையில் குறைந்த பாலைவனமும் உண்டு. தென்னிந்தியா வில் திருநெல்வேலி வட்டத்தில் திருச்செந்தூரை அடுத்து 'குதிரை முடித்தேரி' என்னும் பாலை வனம் ஒன்றுண்டு. இதுவே, தமிழ்நாட்டார் காட் சிக்கு உட்பட்ட சிறு பாலைவனமாகும். அளவில் இதனினும் பெரியதாயினும் இதுபோலவே புதர் கள் ஆங்காங்கு நிறைந்ததும் ஆங்காங்கு வற்றி வரும் வறண்ட ஊற்றுக்கள் உடையதும் ஆகிய ஒரு பாலைவனமே கலஹாரி என்பது. இது தென்னாப்ரி காவின் உட் பகுதியில் உள்ளது. இதன் வட கோடியில் 'ஙாமி'[1] என்ற ஏரி இருக்கிறது. அதனை அடுத்துச் செழிப்புள்ள இடம் இருக்கிறது. அவ் விடத்தில் பல ஆறுகள் பாய்கின்றன.

### முன்னோர் முயற்சி

முன்னே இதனை நாடிச் சில வெள்ளையர் செல்ல முயன்றனர். எனினும் அவர் அம்முயற்சி யில் மாண்டு அழிந்தனர். ஆதலின் அவர் அப்பாலை வனத்தைப்பற்றி அறிந்த அறிவும் உலகிற்குப் பயன்படாது, அவருடன் அழிந்துபோயிற்று. வேலை

1. Lake Ngami.

வெற்றிகரமாக அதனைக் கடந்து 'ஙாமி'யைக் கண்ணுற்ற முதல் வெள்ளையர் லிவிங்ஸ்டனே ஆவர்.

## ஸெபிட்டுவேன் அருங்குணங்கள்

லிவிங்ஸ்டன் இக்காரியத்தை மும்முறை முயன்று, பல முறை தோற்ற பிறகே வெற்றி காண முடிந்தது. முதலில் இத்துறையில் கவனம் செலுத்தக் காரணமாக இருந்தவர் ஸெச்சீலே ஆவர். கலஹாரிப் பாலைவனத்துக்கு அப்பால் வாழ்ந்த 'மகோலொலோ'[1] வகுப்பினரின் மாபெருந் தலைவனான ஸெபிட்டுவேன்[2] என்பவன் ஒரு முறை ஸெச்சீலின் உயிரைக் காத்தவன். மற்றும் அவருக்குத் தலைமைப் பதவியும் தந்து ஆதரித்தவன். மேலும், பூயர்களால் அழிக்கப்பட்ட பல வகுப்பினரின் சிதறிய பகுதிகளைத் தன்னுடன் சேர்த்து ஆதரித்த அருளாளனும் அவனே. பிற வகுப்பினரை மட்டும் அன்றிப் பிறநாட்டினரையும் வரவேற்று ஆதரிக்கும் அருள் உள்ளம் கொண்டவன் அவன் என்பதை ஸெச்சீல் கூறினர். அதுகேட்ட லிவிங்ஸ்டன் அவனைக் காண அவாவினர். இஃது இயற்கையே அன்றோ?

## ஆஸ்வெல் நட்பு

லிவிங்ஸ்டன், இம்முறை தம் ஆருயிர் நண்ரும் ஆஃப்ரிக நாட்டில் உள்ள வெள்ளையரிடையே 'ஒப்புயர்வற்ற வேட்டையாளர்' என்று புகழ்பெற்றவருமான ஆஸ்வெல்[3] என்பவரைஉடன் கொண்டு சென்றார். லிவிங்ஸ்டனுக்கு இப்பொழுது மூன்று பிள்ளைகள் இருந்தனர். மூன்றும் பிள்ளைக்கு ஞானத் தந்தையாக இருந்தவரும் இந்த ஆஸ்வெலே யாவர்.

1. Makololo 2. Sebituane. 3. Osewell.

## பாலைவன யாத்திரை I

பாலைவனத்திடையே கிடைத்தற்கரிய அரும் பொருள் தண்ணீரே ஆகும். நீரின்றி மக்களும் விலங்குகளும் அடையும் துயரம்சொல்லொணாதது. காய்ச்சலால் வரும் தீமை மற்றொருபுறம். ஆறுகளில் சிறிதளவாகக் கிடக்கும் நீரைப்பருக எண்ணி இறங்கினாலோ, முதலை எமன்கள் ஒளிந்து கிடக்கும். இவ்வனத்தில் மிகக் குள்ளமான 'புதர் மக்கள்', என்ற ஒரு வகுப்பினர் உண்டு. அவர்கள் கூரிய மதியும் புற்றெறும்புகள் போன்ற சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் உடையவர்கள்; தீங்கற்ற உள்ளமும் திறமும் படைத்தவர்கள். லிவிங்ஸ்டனுக்கு வழி காட்டியாக வந்தவன் இவ்வினத்தவனே. அவன், அவ்வப்போது தானே வழி தவறியும், அவ்வப்போது அவர்களை விட்டகன்று திகைக்க வைத்தும் வந்தான். ஆயினும் சூதற்ற உள்ளத்துடனும் கவர்ச்சிமிக்க நடிப்புடனும் தற்பெருமை தோன்ற அவன், அவர்கள் முன் நடந்து சென்று ஆரவாரம் செய்வான். எனவே அவனை யாரும் சினந்து கொள்வதில்லை. அங்கங்கே புதர்மக்களின் மாதர் அவர்களைக் கண்டு ஓடுவர். பிறகு அவர்கள் தண்ணீர் மட்டுமே கேட்பது கண்டு வேளாண்மையுடன் நன்கு உபசரிப்பர். லிவிங்ஸ்டன் தந்த உணவுப் பொருள்கள், பரிசுகள் ஆகியவற்றைக் கண்டு அவர் மகிழ்ந்து கூத்தாடினர்.

## உதவி மறுப்பு

சிறிது தூரம் சென்றதும் "இதோ 'நாமி' ஏரி" என ஆஸ்வெல் துள்ளிக் கூத்தாடினார்.

1. Busamin.

ஆனால், அஃது உண்மையில் நீரன்று; கானல் ஒளியே என்று கண்டு, அவர் ஏமாற்றம் அடைந்தனர்; நெடுநாட் சென்றபின் 'ஜுகா'[1] என்ற ஆற்றையும், அதன்பின் அதனினும் பெரிதான 'தமுனக்கிள்'[2] என்ற ஆற்றையும் கண்டார். தமுனக்கிள் கடந்தால் ஸெபிட்டுவேனைச் சந்திக்கலாம். ஆனால், அந்த ஆறு அகலமும் ஆழமும் உடையதாக இருந்தது. லிவிங்ஸ்டன் இக்கரையில் இருந்த தலைவனிடம் ஓடம் வேண்டினர். ஸெபிட்டுவேனிடம் பொறாமை கொண்ட அத்தலைவன் உதவ மறுத்தனன். எனவே லிவிங்ஸ்டன், வேறு வகையின்றிப் புறப்பட்ட இடத்திற்கே மீள வேண்டியிருந்தது. ஆஸ்வெல் தாம் நன்னம்பிக்கை முனை செல்வதாகவும் அங்கிருந்து நல்ல படகு அனுப்புவதாகவும் கூறிச் சென்றார்.

## பாலைவன யாத்திரை II

லிவிங்ஸ்டன் வாழ்க்கை நடத்திய இடத்தில் பஞ்சம் தொடர்ந்து நிலை பெற்றது; எனவே இவர் பள்ளி, பயிற்சிக்கூடம் யாவும் சீர்குலைந்தன. வேறு வேலையின்மையால் 1850-ஆம் ஆண்டில் இரண்டாவது முறையும் பாலைவனத்தைக் கடக்கும் முயற்சியில் லிவிங்ஸ்டன் ஈடுபட்டார். இம்முறை காய்ச்சலால் வருந்திய அறுபது வெள்ளையரைக் காக்கும்பொருட்டு, லிவிங்ஸ்டன் அவர்களுக்குநேர் வழி விட்டு விலகிச் சிலநாள் போக்கினர். இதனிடையில் லிவிங்ஸ்டன் பிள்ளைகளும் வேலையாட்களும் காய்ச்சலால் பீடிக்கப்படவே, இம்முறையும் பயன்பெறாது திரும்பினர். இத்தறுவாயில் திருவாட்டி லிவிங்ஸ்டன் வழியில் கருவுயிர்த்து ஒரு

1. Reira Juga. 2. Tamuncle

பெண் மகவு ஈன்றார். ஆறு தினங்களுக்குள் அம் மகவும் நோய்வாய்ப்பட்டு இறந்தது. அதன் பின் உடல் நலத்தை எண்ணி அனைவரும் குருமான் வந்தனர். அங்கிருந்து ஆஸ்வெலைக் காணச் சென்ற அவர்கள், அவரை எதிரே கண்டு மீண்டார்கள்.

### ஸெபிட்டுவேன் அன்பு காட்டல்

ஸெபிட்டுவேன், தன்னை லிவிங்ஸ்டன் காண வந்தது கேட்டு, அவருக்கு அழைப்பும் பரிசில்களும் தூதர் மூலம் அனுப்பி யிருந்தான். ஸெச்சீல் சற்றும் முன் யோசனை இல்லாமல், லிவிங்ஸ்டனைக் கேளாமலே தூதரை அனுப்பிவிட்டார். லிவிங்ஸ்டன் அத்தூதருடன் சென்றிருந்தால் எவ்வளவோ துன்பம் குறைந்திருக்கும்.

### பாலைவன யாத்திரை III

லிவிங்ஸ்டன் மூன்றாம் முறையாக 1851-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஸெபிட்டுவேனை நாடிச் சென்றார். இம்முறை அவர்கள் 'தமுனக்கிள்' என்ற ஆற்றை எளிதில் கடந்து, ஸெபிட்டுவேனுடன் அளவளாவினர். இருண்ட ஆஃப்ரிக நாட்டு வாழ்வினிடையே லிவிங்ஸ்டன் கண்களுக்குஸெபிட்டுவேன் ஒரு பேரொளி விளக்கமாகவே திகழ்ந்தான். அவன் தன் வாழ்நாட்களுக்குள் பல வகுப்பினருக்கும் நிழல் அளித்துப் பகையச்சம் போக்கிய சான்றோன். அவன் சிறந்த போர் வீரன்; இரப்பவர்க்கு ஈத்து உவக்கும் தண்ணளியான். அவன் ஈகை, அருள், நட்பு ஆகிய உயர் குணங்களைக் கொடுமுடிகளாகக் கொண்ட அருட்குணக் குன்றாக விளங்கினான்.

### பயன் பெறாத முயற்சி

ஸெபிட்டுவேன் லிவிங்ஸ்டனை நன்கு வரவேற்றான்; குடியேற எவ்விடம் வேண்டினும் அவ்விடம் தருவதாக வாக்களித்தான். ஆயினும் அவனால் லிவிங்ஸ்டனும் இவர் பணியும் முழுப்பயன் பெற முடியாது போயிற்று. லிவிங்ஸ்டன் வந்த சில நாட்களுக்குள் அவனை ஈரல் காசநோய் பிடித்தது. லிவிங்ஸ்டன், ஆஃப்ரிக நாட்டின் கருமாணிக்கமான அவனைத் தம் மருத்துவத்தால் குணப்படுத்த எவ்வளவே ஆவல் உடையவராக இருந்தார். ஆனால் மூடநம்பிக்கை மிகுந்த அந்நாட்டு மக்கள் அவரிடம் அவநம்பிக்கைகொண்டனர். இயல்பாகவே அவனுக்குத் தீது நேரிடினும் அது தம்மால் விளைந்தது எனக் கொண்டு அந்நாட்டு மக்கள் தமக்குத் தீங்கு செய்வர் என லிவிங்ஸ்டன் அஞ்சித் தம் ஆவலை அடக்கிக் கொண்டார். ஸெபிட்டுவேனும் விரைவில் இயற்கை எய்தினான். ஆட்சிக்கு உரிமையுடையவளாய் வந்த அவன் புதல்வி 'மெமோச்சிஷானே'யும் லிவிங்ஸ்டனிடம் நல் எண்ணம் உடையவளாகவே இருந்தாள். ஆனால் லிவிங்ஸ்டன் குடியிருப்புக்கேற்ற இடம் காணாது மீண்டனர்.

### குடும்பத்தைத் தாய்நாட்டுக்கு அனுப்புதல்

இதற்கிடையில் லிவிங்ஸ்டனும் ஆஸ்வெலும் கிழக்கில் 'ஃஜாம்பெஸி'[1] ஆற்றுத் தலைநிலம் வரையில் சென்று வேவு பார்த்தனர். இறுதியில் திருவாட்டி லிவிங்ஸ்டன் உடல் நலத்தையும், குழந்தைகளின் கல்வியையும் எண்ணி, லிவிங்ஸ்டன் தம்குடும்பத்தை இங்கிலாந்துக்கே அனுப்ப உறுதிகொண்

1. River Zambesi.

டார். அதனால், அவர்கள் நன்னம்பிக்கை முனைக்குப் பயணமானார்கள்.

### உழைப்பைப் பாராட்டுதல்

லிவிங்ஸ்டன் இப்பயணங்களாலும் அவ்வப்போது நேரிட்ட இன்னல்களாலும் பெரிதும் கடன்பட்டு உழன்றார். சமயப்பணி நிலையமோ லிவிங்ஸ்டன் செலவுகளை வீண்செலவுகள் எனக்கூறி, அவர் வீரச் செயல்களை அசட்டை செய்தது. இங்கிலையில் ஒப்பற்ற தன் மதிப்புடன் ஆஸ்வெல், தம் பண்ணை வரும்படியில் ஒரு பகுதியை லிவிங்ஸ்டனுக்கு நட்புரிமையுடன் உதவினார். அத்துடன் அரசாங்கமும், நில இயல் மன்னரவை ஆராய்ச்சிக் கழகத்தாரும் லிவிங்ஸ்டனின் பணியைப் போற்ற முன்வந்து 'ஙாமி' ஏரியைப் புதுவதாகக் கண்டதற்காக இவருக்கு 25 பெரும் பொற்காசுகள் (கினிகள்) வழங்கினர். இங்ஙனமாகச் சமயத்துறையிலும் மக்கட் பணித்துறையிலும் லிவிங்ஸ்டனுக்கு உரிய புகழ் அவரை வந்து அடையும் முன்னரே, அறிவியல் ஆராய்ச்சித்துறையில் புகழ்ச்செல்வி அவரை அடையலானாள்.

## 11. இரண்டாம் பிரயாணம்

### துன்பங்களுக்கு இடையில் தொண்டு

லிவிங்ஸ்டனின் இரண்டாம் பிரயாணமே தென் ஆஃப்ரிகாவின் உள்நாட்டுப் பகுதியைக் கீழ்க்கடலுடனும் மேல்கடலுடனும் (இந்துமாகடற் கரையுடனும் அட்லாண்டிக் மாகடற்கரையுடனும்)

இணைத்தது; இதனால் அந்நாடு உலகப்போக்கு வரவு நெறிகளுடனும், நாகரிகப் போக்குடனும் தொடர்பு பெற்றது. ஆயினும் இப்பெருங் காரியத்தைத் தொடங்கும்போது லிவிங்ஸ்டனை, அன்றைய ஆற்றல் மிக்க குழுவினர் பலரும் எதிர்க்கவே முற்பட்டனர். பூயர்கள்[1] 'லிவிங்ஸ்டன் தங்கள் அடிமை வாணிகத்தை அழிக்கப் பார்க்கின்றனர்' என்று இவர்மீது சீறினர். தென் ஆஃப்பிரிக அரசாங்கம் எல்லா வல்லரசுகளுடனும் ஒப்புரவு காட்டி 'சமயப் பணியாளர் நாட்டுப்பற்று அற்றவராக நடக்கின்றனர்' என்று எண்ணிற்று. ஆகவே அவ்வரசாங்கத்தாரும் அவர்களிடம் உவர்ப்புக் காட்டினர். சமயப்பணி நிலையமோ லிவிங்ஸ்டன் தம் சமய உட்கிளையின் கட்டுப்பாட்டை மீறிப் பொது மனப்பான்மையுடன் நடந்துவந்தது கண்டு புழுங்கிற்று. லிவிங்ஸ்டன் இக் குறுகிய மனப்பான்மைகளுக்கிடையும் உண்மையான அருள் நோக்குடன் இறைவன் பணியில் வீறு கொண்டு இறங்கினர்.

## புதுப் பயிற்சி

நன்னம்பிக்கை முனையில் தங்கிய சில நாட்களில், லிவிங்ஸ்டன் ஆஃப்ரிகப் பயணத்தின்போது தமக்கு ஏற்பட்டிருந்த உள்நாக்கு வளர்ச்சியை அறுவை மருத்துவத்தால் சரிசெய்து கொண்டார். அத்துடன் அவர், திக்கறியாத இடங்களில் தம் நிலையறிய உதவும்படி கோள்களின் நிலைகளையும் விண்மீன்களின் நிலைகளையும் கொண்டு நிலக் கிடக்கையை வரையறையிட்டு அளவைப் படம் வரையும் முறையையும் பயின்று கொண்டார்.

---

1. Boers.

## பூயர் அட்டூழியம்

லிவிங்ஸ்டன் குருமானுக்கு வந்தபோது உள்ளந்துடிக்கும் நிகழ்ச்சி ஒன்றைக் கேள்விப்பட நேர்ந்தது. லிவிங்ஸ்டன் பணியை வெறுத்த அடிமை வணிகராகிய பூயர்கள் இவர் அரும் பணி ஆற்றிய இடமாகிய பெக்குவான நாட்டைத் தாக்கிச் சூறை கொண்டனர்; ஸெச்சீலின் குழந்தைகள் சிலரையும், லிவிங்ஸ்டன் பள்ளிப் பிள்ளைகளையும், பிறமக்களையும் அடிமைகளாகக் கொண்டனர்; லிவிங்ஸ்டன் குடிசையையும் குடியிருப்பையும் அடியோடு அழித்து ஒழித்தனர். பெக்குவானர் செல்வமெல்லாம் அழிந்து, பலர் உயிர் இழந்தனர். எஞ்சிய சிலருடன் ஸெச்சீல் லிவிங்ஸ்டனிடம்வந்து முறையிட்டார். உயிர்வதைக்கு ஆளான அக்காலத்தும் அம்மக்கள் நம்பிக்கையும் உறுதியும் பற்றும் கெடாமல் லிவிங்ஸ்டன் பணியைத் தாமே நடத்த முன்வந்த ஒன்றே இவர் மனப் புண்ணுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது.

## நல்ல நோக்கம்

லிவிங்ஸ்டன் ஸெச்சீலைத் தம்முடன் அழைத்துச்சென்று அவருக்கும் அவரைச் சேர்ந்தவருக்கும் ஏற்பட்ட தீமையைப்பற்றி விக்டோரிய பேரரசியிடம் முறையிட முயன்றார். ஆனல் பக்கத் துணையின்றி அது வீணாயிற்று. இனி வடக்கே செல்லும் முயற்சியில் பூயர் எதிர்ப்பு இருக்கும் என்பதை லிவிங்ஸ்டன் அறிந்தார். எப்பாடுபட்டாயினும் ஆஃப்ரிக உள்நாட்டுப் பகுதியை நாகரிக உலகுடன் இணைத்தாலன்றி அடிமை வாணிகத்தை நிறுத்த முடியாது என்பதை இவர் கண்டார். ஆதலால் லிவிங்ஸ்டன் வடக்கு நோக்கி மீண்டும்

பயணமானார். இம்முறை இவர் செல்ல விரும்பிய இடம் ஸெபிட்டுவேனின் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின்வடகோடியில் உள்ள 'லின்யாண்டி'[1] ஆகும்.

## பூயர்களுடன் உடன்படிக்கை

பூயர்களுக்கும் ஆஃப்ரிக மக்களுக்கும் இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பெரும்போர் நிகழ்ந்து வந்தது. இப்போரே 'கா ஃபிரிப் போர்'[2] எனப்படும். அப்போர் கீழ்க்கரைப்பக்கம் நடந்தது. ஆகவே அவ் வழி எளிதாயினும் அவர்கள் அலைத விட்டகன்று கலஹாரிப் பாலைவனத்தின் வழியே மீட்டும் செல்லவேண்டியவராயினர். அப்படிச் சென்றும் பூயர்களுடன் பல கைகலப்புகள் நேர்ந்தன. போர் இறுதியில் பிரிட்டிஷார் அப்பகுதியில் பங்கு கொண்டதாலும் 'பரோலாங்'[3] வகுப்பினர் பெக்குவானர்களுடன் சேர்ந்ததனாலும் பூயர்கள் உடம்படிக்கை செய்துகொண்டனர். ஸெச்சீலின் பிள்ளைகளில் பூயர்களின்கொடுமைக்கு இரையாகாது எஞ்சிய சிலரும் பிற பெக்குவானரும் தம் இனத்தவருடன் வந்து சேர்ந்தனர். 'இறந்தவர் பிறந்தனர்' என்ற அளவில் பெக்குவானர் இன்பக் கூத்தாடினர்.

## புதிய இடத்தில் தொண்டுபுரிதல்

வழியில் பல சிற்றாறுகள் வெள்ளமெடுத்துப் பெருகிச் சேறாக இருந்ததனாலும், வழிகாட்ட உதவிய ஆட்கள் கலகம் விளைத்ததினாலும் பயணம் மிகத் தாமதித்தது. அவர்கள் 'சோப்'[4] ஆற்றை அடைந்ததும் மகோலொலோ வகுப்பினர் இருந்த இடம் சென்று சேர்ந்தனர். ஸெபிட்டுவேனுக்

1. Linyanti 2. Kafir War 3. Barolong 4. River Chobe.

குப் பின் ஆட்சிக்குவந்த அவன் மகன், ஆட்சிப் பொறுப்பை விரும்பாது விலங்கியதனுல் அவன் தம்பியாகிய ஸெக்கெலெட்டு[1] தலைவனுனன். அவனும் லுவிங்ஸ்டனிடம் நட்புடையவனுகவே இருந்து வந்தான். ஆனல், போர்ச்சுகீசிய அடிமை வாணிகர்கள் அவன் உடன்பிறந்தானுகிய இம்பெபி[2] யை அவனுக்கு எதிராகத் தூண்டி ஆதரவு அளித்து வந்தார்கள். லிவிங்ஸ்டன் ஸெக்கெலெட்டை அடிமை வாணிகத்தை விட்டொழிக்கும்படி உறுதி மொழி கூறுவித்தார். மேலும் மற்ற வகுப்பினரையும் போர்ச்சுகீஸியரையும் அடிமை வாணிகத்தைக் கைவிட்டு மகோலொலோக்களுடன் கால்நடை வாணிகம் புரியுமாறு தூண்டிவந்தார். இதன்மூலம் அவர்களுக்கு மேற்கில் இருந்த 'லெச்சுலாடெப்'[3] முதலிய வகுப்பினருடன் நட்பும் வாணிகத் தொடர்பும் மிகுந்தன.

லிவிங்ஸ்டன் லின்யான்டியில் சிலநாள் தங்கி, மருந்துவப் பணியும் சமயப் பணியும் ஆற்றிவந்தார். அங்குள்ளவர்களிற் பலர் ஏழு அல்லது எட்டு பெண்களை மணந்தவர்கள். லிவிங்ஸ்டனின் சமயத்தை மேற்கொண்டால், ஒரு மனைவியைத் தவிர மற்றவரை நீக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு வேண்டும். அது, அவர்களை லிவிங்ஸ்டன் சமயத்தில் சேராவண்ணம் நெடுநாள் தடுத்து வைத்தது. ஆயினும் அவர்களுடைய பொதுவாழ்வை லிவிங்ஸ்டனல் பல வகைகளில் மேம்படுத்த முடிந்தது.

காய்ச்சல் நோய் லின்யான்டியிலும் மிகுதியாக இருந்தது. எனவே லிவிங்ஸ்டனும் அடிக்கடி நோய்வாய்ப்பட்டார். இவருடன் குடியேறிய

1. Sekeletu 2. Mpepe 3. Lechulateb.

மொகோலொலோக்களும் வரவரக் குறையலாயி னர். எனவே லிவிங்ஸ்டன் மேல் கடற்கரை சென்று வெளிநாட்டுத் தொடர்பை வளர்க்க வேண்டும் என்ற தம் பழைய திட்டத்தை விரைவில் தொடங்கினர். அதன்படி இவர் ஸெக்கெலெட்டு தந்த ஆட்களுடனும், கால்நடைகள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றுடனும் 1853-ஆம் ஆண்டு நவம்பர் 11-ல் 'லோவாண்டா'[1] நோக்கிப் புறப் பட்டார்.

## புதியவர் உதவி

லிவிங்ஸ்டன் செய்த பயணங்கள் அனைத்திலும் லோவாண்டாப் ப்யணமே மிகுந்த தொல்லைகளை உடையது. இவர் எருது ஒன்றின் மீது ஊர்ந்து ஆற்றைக் கடக்க முற்பட்டார். அப்பொழுது அந்த எருது இவரை நட்டாற்றில் விட்டு அகன்றது. ஸெகெலெட்டுவின் செல்வாக்கு பரவிய எல்லை யைக் கடந்தபின் லிவிங்ஸ்னுடம் இவரைச் சேர்ந் தோரும் 'பாலோண்டாக்கள்'[2] என்ற வகுப்பினரைக் கண்டனர். அவர்கள் தலைவன் 'ஷின்டே'[3] என்ப வன் அவன் துணைத்தலைவியான 'மானென்கோ'[4] என்பவள் அவன் கீழிருந்து கிழக்கெல்லையை ஆண் டாள். அவள் ஆண்மையும் வீரமும் பிடிவாதமும் உடைய வீரப் பெண்மணி. அவள் லிவிங்ஸ்டன் கூட்டத்தார்க்கு உதவ முன்வந்தாள்; ஆயினும் அவள் அவர்களை ஆற்றில் படகுமூலம் போகவிடா மல் தன் மனம்போல் கரை வழியாகப் போகச் செய்தாள். லிவிங்ஸ்டன் ஆட்கள் அவளுடன் ஒத்து நடக்க முடியாமல் அவலமுற்றனர்.

1. Loandos 2. Bolonda 3. Shinte 4. Manenko.

ஷின்டே நடுஆஃப்ரிகாவிலேயே மிக்கஆரவார மான அரச நிலையுடையவன். அவன் தன் கொலு மண்டபத்தில் லிவிங்ஸ்டன் முதலியோரை வரவேற் ருன். லிவிங்ஸ்டன் அவனுக்கு ஓர் எருதைப் பரி சளித்தார்; பின் மகோலொலோவுடன் வாணிகம் செய்யத் தூண்டியபின், அவன் தந்த வழிகாட்டி களுடன் காதேமா[1] என்ற மற்ருெரு தலைவனை அடைந்து அங்கும் அவனுல் ஆதரிக்கப் பெற்ருர்.

## பல இடையூறுகள்

இதன் பின், லிவிங்ஸ்டன் நோயாலும் கீழுள் ளோர் கலகங்களாலும் பல தொல்லைகள் அடைந் தார். பலமுறை தம் ஆட்களையே துப்பாக்கியால் அச்சுறுத்தி அடக்கவேண்டியவாராஞர். 'சீபோக்'[2] என்ற வகுப்பினரின் தலைவன் படைகளுடன் அவர்களை அழித்துப் பெருங் கொள்ளைபெற எண்ணினன். லிவிங்ஸ்டனும் இவர் ஆட்களும் காட்டிய ஆண்மையால் அவன் பணிந்துவிட்டான். எனினும் போகுமிடம் எங்கும் அவன் ஆட்கள் தொல்லை தந்துகொண்டே இருந்தனர், இறுதியில் லிவிங்ஸ்டனும் இவரைச் சேர்ந்தவர்களும் ஏப்ரல் மாதம் முதலாம் நாள் 'ஹோவாங்ஹோ'[3] என்ற ஆற்றை அணுகினர்; அவ்வாற்றைக் கடக்கப் போர்ச்சுகீஸிய ஊர்த் தலைவன் ஒருவனின் உதவி வேண்டினர். அவனும் இவர்களிடம் ஏதேனும் ஒரு பொருளைக் கைம்மாருகப் பெற எண்ணினன். ஆயினும் லிவிங்ஸ்டன் முதலியோர் தம் மிடமுள்ள பொருள்களை இழக்க மனமின்றி அவன் ஆட் களைச் சட்டை செய்யாமல் எதிர்த்துப் போராடி

1. Kathema 2. Chebogue 3. Hoangho.

னர்; இறுதியில் 'ஸிப்ரியானே'[1] என்ற போர்ச்சுகீசிய படைத்தலைவன் உதவியால் ஆற்றைக் கடந்தனர். அவனே அவர்களுக்கு உணவும் நல்லிடமும் தந்ததுடன் மாகோலொலோக்களுக்கு விரைவில் ஊதியம் தரும் வாணிகமுறைகளைக் காட்டினன். அவன் உதவியாலேயே அவர்கள் எளிதில் எஞ்சிய தூரத்தையும் கடந்து லோவாண்டா சென்றூர்கள்.

## லோவாண்டாவில் லிவிங்ஸ்டன்

ஸெகெலெட்டுவின் பரிசுகளுள் இரண்டு யானைத் தந்தங்கள் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. லிவிங்ஸ்டன் அப்பொருளைக் கொண்டு அவனுக்குக் குதிரைகளும், பிற பொருள்களும் வாங்கினர். அவர் மேலும் நடந்து இறுதியில் கடலைக் கண்டனர். அதுவரையில் கடலையே கண்டிராத மகோலொலோக்கள், கடலைக் கண்டதும் அடைந்த வியப்பிற்கு எல்லை இல்லை. லோவாண்டாவில் அடிமை வாணிக எதிர்ப்புப் பணியாளரான திரு. கேப்ரியேல்[2] லிவிங்ஸ்டனையும் மற்றுமுள்ளவரையும் மிக அன்புடன் வரவேற்றார். லிவிங்ஸ்டனுக்குக் கப்பல் மாலுமி ஒருவரும் நன்கு பழக்கமானர். அவரது கப்பல் மூலமாகவே லிவிங்ஸ்டன் தம் பயணத்தில் எடுத்த படங்களை சில இயல் ஆராய்ச்சிக் கழகத்திற்கு அனுப்பினர். ஆனல் காலக் கேட்டினல் அக்கப்பல் உடைந்துபோனதால் அவற்றை இவர் மீண்டும் வரைந்தனுப்ப வேண்டியதாயிற்று.

## கண்ணுக்கு இனிய காட்சி

போர்ச்சுகீஸிய ஆஃப்ரிகாவில் லிவிங்ஸ்டன் கண்ட காட்சிகள் இவருக்கு மகிழ்ச்சி அளித்தன.

1. Cyprino 2. Mr. Gabriel.

போர்ச்சுகீஸியர் நாட்டு மக்களுடன் தங்குதடையின்றி மண உறவுகொண்டு கலந்தனர். நாட்டு மக்களும் கல்வி, அலுவல், ஆட்சி இம்மூன்றிலும் வெள்ளையருடன் ஒன்றுபட்டுக் கலந்திருந்தனர். பூயர்கள் நாட்டுமக்களை எதிர்த்ததைக் காட்டிலும்-ஆங்கிலேயர் பிரித்துவைத்து ஒப்புரவு காட்டியதை விட—இஃது எவ்வளவோ இனிய காட்சி என லிவிங்ஸ்டன் கருதினார்.

## முன் இடத்திற்கு மீளல்

திரும்பும் பயணத்தில் சிபோக்குகள் முன்னளவு தொல்லை தரவில்லை. 'காடமா'[1] 'வின்டோ'[2] ஆகியவர்கள் உறவினர்போல் களிப்புடன் வரவேற்றனர். லிவிங்ஸ்டனும் தாம் கொண்டுவந்த பழங்கள், உணவுப் பொருள்கள், இன்ப வாழ்வுப் பொருள்கள், ஆகியவற்றால் அவர்களை மகிழ்வித்தார். மகோலொலோக்கள், இறந்தவர் மீண்டும் வந்தாலொத்த மகிழ்ச்சி கொண்டு கூத்தாடி, எதிர் கொண்டு அழைத்தனர். அவர்களால் லிவிங்ஸ்டன், ஊர்வலம் வரும் அரசகுமரன் போல் பரோட்ஸாப் பள்ளத்தாக்கிலிருந்து[3] லின்யான்டிவரை ஆரவாரமாகக் கொண்டு செல்லப்பட்டார்.

## விக்டோரியா நீர்வீழ்ச்சி

லின்யான்டியில் லிவிங்ஸ்டன் எட்டு வாரங்கள் தங்கினார். 'உள்நாட்டுப் பகுதியை மேல் கடற்கரையுடன் இணைத்தாய்விட்டது. இனிக் கிழக்குப் பக்கத்துடனும் இணைப்பு ஏற்படுத்தவேண்டும்' என எண்ணிய லிவிங்ஸ்டன், கிழக்கே கிலிமேன்[4] நோக்கிப் புறப்பட்டார். அவர்களுடன் ஸெகெ

---

1. Kadama 2. Vinto 3. Barotsa Valley 4. Quilamane

லெட்டு ஜாம்பெஸித் தலைநிலம் வரை வந்தான். லிவிங்ஸ்டனும் பிறரும் அவ்வாற்றின் வழியே சென்று அதில் உள்ள ஒரு பெரிய நீர்வீழ்ச்சியை அடைந்தனர். இப்பெரிய நீர்வீழ்ச்சியிலிருந்து நீர்த்திவலைகள் மிக உயர்ந்து தூண்கள்போல் மேலெழுந்து சென்றன. ஆகவே, அதனை அந் நாட்டு மக்கள் **மோஸி-வா-துன்யா,**[1] அஃதாவது 'இரைச்சலிடும் நீராவி' என்று பெயரிட்டிருந்தனர். லிவிங்ஸ்டன் தம் நாட்டை, அந்நாள் ஆண்ட விக்டோரியா பேரரசியின் பெயரை இட்டு, அதனை **'விக்டோரியா நீர்வீழ்ச்சி'**[2] என்று அழைத்தார். அஃது இன்றளவும் அப்பெயராலேயே வழங்குகிறது.

### புதிய காட்சிகள்

அந்நீர்வீழ்ச்சியின் இருபுறங்களையும் அடர்ந்து உயர்ந்த மரங்கள் அழகுசெய்தன. தென் ஆஃப்ரிகாவில் இதுவரை லிவிங்ஸ்டன் கண்ட காட்சிகள் எல்லாம் பரந்த பாலைவனங்களும் புதர்களும் சதுப்பு நிலங்களும் மங்கலான தோற்றமுடைய குன்றுகளுமே ஆம். ஆனால் இதற்கு மாறாக, லிவிங்ஸ்டன் கண்முன் இயற்கை, பன்னிறத் தோகை விரித்தாடும் பச்சை மயில்போல் தன் முழு அழகுடன் தோற்றமளித்த முதலிடம் இதுவே. லிவிங்ஸ்டன் சிறு படகுகளில் சென்று நீர் வீழ்ச்சியை அடுத்து உள்ள தீவில் இறங்கினர்; அதனுள் பாறையைத் துளைத்தோடும் கிளை நீர் வீழ்ச்சிகளைக் கண்டு வியந்தார். பருத்த தூண்கள் உருவில் தண்ணீர் நிலத்தைக் கிழித்துப் பாதாளத்தில் செல்வது போன்ற அக்காட்சி அச்சந் தருவதாக இருந்தது.

1. Mosi-va-Tunya 2. Victoria Falls

கிழக்குப் பகுதிக் குடிகள்

மேற்றிசையில் வாழ்ந்த மக்களைப்போலவே கீழ்த்திசையிலும் பலவகை முரட்டு வகுப்பினர் தொல்லை தர இருந்தனர். லிவிங்ஸ்டன் சில சமயம் அச்சுறுத்தலாலும், சில சமயம் நயத்தாலும், சில சமயம் தம்மிடத்திலுள்ள அரிய நாகரிகப் பொருள்களான கடிகாரம், வெயில் கண்ணாடி முதலியவற்றால் வேடிக்கை காட்டுவதாலும் அவர்களைத் தம் வயப்படுத்திக் கொண்டார். போர்ச்சுகீஸியருடன் அண்மைவரைப் போரிட்ட மக்கள் சிலர், லிவிங்ஸ்டனைப் போர்ச்சுகீஸியரென நினைத்துப் பகைத்தனர். லிவிங்ஸ்டன் தம் தோலின் தூய வெண்மையைக் காட்டித் தாம் வேறு நாட்டினர்என்பதை உணர்த்தினார். அவர்கள் "ஆ! தூய வெண்ணிறம் கறுப்புடன் நட்புடையது; கலப்பு நிறமே எங்களைப் பகைப்பது" என்று கூறி நட்புக்கொண்டார்கள்.

லிவிங்ஸ்டன் போர்ச்சுகீஸிய எல்லை அடைந்ததும், மேலைப் போர்ச்சுகீஸியர் சிலரிடமிருந்து பெற்ற கடிதங்கள் அவருக்கு உதவியாயின. அவ்விடத்துப் படைத்தலைவர் மேஜர் ஸிக்கார்டு[1] என்பவர்; அவர் லிவிங்ஸ்டன் முதலியோருக்கு உணவு அனுப்பி வரவேற்றார். லிவிங்ஸ்டன் தம்முடன் வந்த மகோலொலோக்களை இங்கே உள்ள டெட்டி[2] என்ற இடத்தில் தங்கச் செய்தனர்; பிறகு கடல் வழியாக ஸேன்னவுக்கும்[3] அங்கிருந்து மௌரிடியஸுக்கும்[4] சென்றார். இவருடன் சென்ற 'ஸெக்வேபு'[5] என்ற மகோலொலோ வகுப்பினன் கடல், கப்பல் முதலிய கண்காணாக் காட்சியைக் கண்ட மட்டற்ற

1. Major Siccard 2. Tette 3. Cenna 4. Mauritius 5. Sequebu.

மகிழ்ச்சியால் மனநிலை தடுமாறிப் பித்தனாகி இருந்தான். மற்ற மகோலொலோக்கள் விறகு வெட்டுதல் முதலிய தொழிலில் ஈடுபட்டு, டெட்டியிலேயே தங்கிப் பொருள் ஈட்டி இன்புடன் வாழ்ந்தனர்.

லிவிங்ஸ்டன் மௌரிடியஸில் ஒரு திங்கள் தங்கினார். ஆஃப்ரிகப் பயணத்தினிடையே நோய்ப் பட்டு உப்பியிருந்த தமது நுரையீரலை இவர் அறுவை மருத்துவத்தால் குணப்படுத்திக் கொண்டார். அதன்பின் 'பி அண்ட் ஓ' கழகத்திற்கு[1] உரிய கண்டியா[2] என்ற கப்பலில் தாய் நாடு செல்லப் புறப்பட்டார்.

## 12. கிழக்கு ஆஃப்ரிகா

### தாய்நாட்டில் சிறப்புப் பெறுதல்

லிவிங்ஸ்டன் பயணம் செய்த கப்பல், இங்கிலாந்து செல்லும் வழியில் உடைந்துபோயிற்று. அதனால் இவர், வேறு கப்பலேறி மார்சேல்ஸ்,[3] பாரிஸ்[4] ஆகிய இடங்களின் வழியாக வந்துசேர்ந்தார். தாய் நாட்டில் மக்கள் ஆயிரக்கணக்கில் திரள் திரளாக வந்து இவரைக் கண்டனர். மன்னர் நில இயல் ஆராய்ச்சிக் கழகம்,[5] லண்டன் சமயப் பணிக் கழகம்[6] முதலிய கழகங்கள் லிவிங்ஸ்டனுக்குப் பாராட்டுகள் அளித்து, பரிசுகளும், தங்கப் பதக்கங்களும் தந்தன. லண்டன், தன் நகர உரிமையை இவருக்குத் தங்கப் பேழையில் வைத்து அளித்தது. கிளாஸ்கோ நகரம், உரிமை அளித்து 2000 பொன்னும் தந்தது. எடின்பரோ, லீட்ஸ், லிவர்பூல்,

1. P. and O. Company 2. Khandia 3. Marseilles 4. Paris 5. Royal Geographical Society 6. London Mission Society.

பிர்மிங்ஹாம் முதலிய நகரங்களில் பாராட்டுகள் நடைபெற்றன. ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள், அறிஞர் பட்டங்கள் நல்கின. இவ்வளவிற்கும் மேலாக அந்நாளைய ஆங்கிலநாட்டு முதன் மந்திரியான பாமர்ஸ்டன்[1] லிவிங்ஸ்டனைக் கிழக்கு ஆஃப்பிரிகாவின் அயல்நாட்டு அமைச்சராக[2] அமர்த்திப் பெருமைப்படுத்தினர்.

## பிரயாணம் பற்றிய முதல்நூல்

லிவிங்ஸ்டனின் தாய்நாட்டு நண்பர்கள் பெருந்தகை ஆர். மர்ச்சிஸன்,[3] திரு ஜான் மரே[4] என்போராவர். இவர்கள் லிவிங்ஸ்டனை நோக்கி, "தாங்கள் மீண்டும் ஆஃப்ரிகாவுக்குப் பயணமாகுமுன், முன் செய்த ஆஃப்ரிகப் பயணங்களைப் பற்றி ஒரு நூல் எழுதவேண்டும்" என வேண்டினர். லிவிங்ஸ்டனும் அவ்வாறே எழுதினர். இந்நூல் இவருக்கு நல்ல வருவாய் தந்தது.

## ஆஃப்ரிகா மீளல்

இதுகாறும் உடல் நலத்தின் பொருட்டும் குழந்தையின் கல்வியின் பொருட்டும் லிவிங்ஸ்டனிடமிருந்து பிரிந்து, இங்கிலாந்தில் தங்கி யிருந்த திருவாட்டி லிவிங்ஸ்டன், இனிமேலும் பிரிந்திருக்க மனமின்றி, உடன்செல்ல உறுதி கொண்டார். எனவே அவர்கள், மூத்த பிள்ளைகள் மூவரையும் தாய்நாட்டில் தங்கச்செய்து, கடைசிப் புதல்வனை ஆஸ்வெலுடன்[5] 1859-ஆம் ஆண்டு மார்ச் 10-இல் பெர்ல் (முத்து) என்ற கப்பலில் ஆஃப்ரிகாவுக்குப் பயணமாயினர்.

---

1. Lord Palmerston 2. Consul for East Africa 3. Sir R. Murchison 4. Mr. John Murray 5. Oswell.

## உடன்சென்ற ஆராய்ச்சியாளர்

வெளிநாட்டு அமைச்சர் என்ற முறையில் லிவிங்ஸ்டனுடன் ஏராளமான ஆட்களும் தளவாடங்களும் அனுப்ப அரசாங்கம் எண்ணிக்கொண்டிருந்தது. ஆனல், 'உண்மைப் பணிக்கு ஆரவாரம் கால்கட்டு ஆகும்' என லிவிங்ஸ்டன் எண்ணினர். ஆகவே அவர் அறிவியல் வல்லுநர் சிலருடன் சிற்சில பொருள்களை மட்டும் ஏற்று, சிலவற்றை ஏற்க மறுத்துவிட்டார். அவ்வல்லுநர்களுள் அறிஞர் கர்க்[1] என்ற செடிநூற் புலமையாளர்[2] திரு. ஸி. லிவிங்ஸ்டன் என்ற மண்கூற்று நூலறிஞர்[3] அவருக்குத் துணையாக திரு. ஆர். தார்ன்டன்[4] என்ற மற்ருெருவர் ஆகிய மூவர் இடம்பெற்றனர். அனைவரும் ஸிராடேயோனைக்[5] கடந்து நன்னம்பிக்கை முனை வருமுன்னர் லிவிங்ஸ்டனின் மனைவி மீட்டும் உடல் நலிவுற்ருர். எனவே, லிவிங்ஸ்டன் அவரை அவர் பெற்ேருரிடம் விட்டு, மேற்சென்று கிழக்கு ஆஃப்ரிகக்கரையைச் சேர்ந்தார்.

## ஆராய்ச்சி செய்தல்

லிவிங்ஸ்டனுடன் நன்னம்பிக்கை அரசாங்க அறிவியல் வல்லுநர் சிலர் சென்றனர். லிவிங்ஸ்டன் அவர்களின் உதவியால் ஃஜாம்பஸி[6] யின் விழுவாயில் பிரியும் நான்கு கால்களையும் நன்கு ஆராய்ந்தனர்; அவற்றுள் 'கோங்கோன்'[7] என்ற கிளையைத் தேர்ந்தனர். பின் அவர்கள் ஆற்றுப் பயணத்திற்கெனத் தாங்கள் கொண்டுவந்திருந்த 'மா ராபர்ட்'[8] என்ற மரக்கலத்தின் பிரித்த

---

1. Dr. Kirk 2. Botanist 3. Gelogist 4. R. Thornton 5. Seerateone 6. River Zambesi 7. Kongone 8. Ma Robert.

பகுதிகளை மீட்டும் இணைத்து, அக்கிளையாற்றின் வழியே மேல் நோக்கிச் சென்று, டெட்டியை அடைந்தனர். லிவிங்ஸ்டன் அங்கே முன்னர் விட்டுச் சென்ற மகோலொலோக்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.

### நயாஸா ஏரி

அதன்பின் லிவிங்ஸ்டன் தம் நண்பருடன் ஸீஜாம்பெஸியின் மற்றொரு கிளையாகிய 'ஷீரே'[1] ஆற்றை ஆராய்ந்துணரும் எண்ணத்துடன் பயணம் செய்தார். அவர்கள் இங்கே டிங்கேன்,[2] ஸிபிஸா[3] முதலிய நாட்டுத் தலைவர்களுடன் நட்புப் பூண்டு இறுதியில் ஏப்ரல் 18-இல் 'ஷிர்வா'[4] என்ற ஏரியைக் கண்டுபிடித்தனர். அதன்பின் அவர்கள் மீண்டும் கடற்கரை வந்துசேர்ந்தனர், படகு செப்பனிடப்பட்டது; பின் மகோலொலோக்கள் சிலரை வழிகாட்டியாகக் கொண்டு, மேலும் வடக்கே பயணம் செய்து செப்டம்பர் 16-ல் 'நயாஸா' ஏரியைக்[5] கண்டனர். இவ்விரண்டு ஏரிகளையும் முதல்முதல் கண்ட ஆங்கிலேயர்கள் அவர்களே யாவர்.

### இன்பமும் துன்பமும்

'நயாஸா' ஏரி 200 கல் அளவு நீண்டு கிடந்தது. அதனைச் சுற்றிலும் உள்ள இடம் மிகச் செழிப்பாக இருந்தது. அவ்விடங்களில் உள்ள மக்கள் பெரும்பாலும் அமைதியான வாழ்க்கை உடையவர்களே யாவர். ஆயினும் அராபியர் வடக்கிலிருந்து இங்கு வந்து நடத்திய அடிமை வாணிகத்தின் காரணமாக அவர்களிடையே அச்ச

1. River Shire 2. Tingane 3. Chibisa 4. Lake Shirwa 5. Lake Nyasa.

மும், ஐயப்பாடும், பூசலும் நிறைந்திருந்தன. லிவிங்ஸ்டன் கிழக்காஃப்ரிக்காவில் தங்கிய காலத்தில் பலமுறை இந்த ஏரியை அணுகிப் பொறுமையோடு முற்றிலும் ஆராய்ந்தார்; அதைப்பற்றிய படங்களும் விவரங்களும் சேர்த்தார். லிவிங்ஸ்டன் அடிமை வாணிகத்தை நிறுத்தி இப்பக்கங்களில் அமைதியும், நல்வாழ்வும் ஏற்படுத்த எவ்வளவோ முயன்றும் அம் முயற்சிகள் எல்லாம் அப்பொழுதைக்கு வீணாயின. மேலும், அவர்கள் சுவட்டைப் பின்பற்றிப் போர்ச்சுகீஸியர் புகுந்து அடிமை வாணிகத்தை வளர்க்கவும் நேர்ந்தது. அதனால் லிவிங்ஸ்டன் முதலில்செல்லும்போது நறுஞ்சோலைகளாக விளங்கிய இடங்கள், மறுமுறை செல்கையில் கண்ணீரும் துயரும் மிக்க 'நன்காடாய்'த் திகழ்ந்தன. ஆயினும் நாளடைவில் ஆங்கில ஆட்சியும் நாகரிகமும் புகுந்து அடிமை அறவே ஒழியும் வகையில் லிவிங்ஸ்டன் பணி, ஒரு வழிகாட்டியாகவே அமைந்தது.

டெட்டியில் தங்கிய மகோலொலோக்களில் பலர், அம்மை நோயால் தொல்லைப்பட்டு இறந்தனர். அவர்களை மீட்டும் தம் நாட்டுக்குக் கொண்டு வருவதாக லிவிங்ஸ்டன் ஸெகெலெட்டுக்கு உறுதி கூறியிருந்தார். அதன்படி இவர் அவர்களை உடன்கொண்டு ஃஜாம்பெஸி ஆற்றில் மேல் நோக்கிச் சென்று 'ஷெஷெகெ'[1] என்னும் இடத்தில் ஸெகெலெட்டைக் கண்டனர். அவன் தொழுநோய்கண்டு தன் மக்களிடமிருந்து பிரிந்திருந்தான். அவன், லிவிங்ஸ்டனின் அறிவுரைகளை மறந்து, மக்களிடை வேற்றுமை காட்டினான்; தன் தந்தை அமைத்த பேரரசையும் அவன் சீர்குலைய

1. Sheshake.

விட்டிருந்தான். லிவிங்ஸ்டன் அவன் நோய்க்கு மருந்து தந்தும் முற்றிலும் குணம் ஏற்படவில்லை. ஆனால் லிவிங்ஸ்டனின் கூட்டுறவால் அவன் மன அமைதி பெற்றான். மகோலோலோக்கள் இழந்த தாயை மீட்டும் பெற்ற சேய்கள்போல லிவிங்ஸ்டனை வரவேற்று மகிழ்ச்சி எய்தினார்கள்.

## நற்பணியில் தோல்வி

அவர்கள் மறுபடியும் டெட்டிக்கு வந்தனர். அப்போதும் ஆங்கில நாட்டுப் பல்கலைக் கழகங்களின் சார்பில் ஓர் ஆங்கில சமயப் பணிக்குழாம் அங்கு அனுப்பப்பட்டிருந்தது. அவர்களைக்கண்ட லிவிங்ஸ்டன் பெரு மகிழ்ச்சி அடைந்தார். லிவிங்ஸ்டனும் இக்குழாத்தினரும் ஒப்பற்ற நல்லெண்ணத்துடன் ஒத்துழைத்து ஆஃப்ரிக மக்களை ஈடேற்றவும், அடிமையை ஒழிக்கவும் அரும்பாடுபட்டனர். ஆனால் இறைவன் திருவிளையாடல் இப்போது அவர்களுக்கு எதிராக இருந்தது. அவர்கள் நற்பணியின் தோல்வி, லிவிங்ஸ்டன் புகழை அங்கிலையில் பழிப்புயலுக்கு ஆளாக்கியது; இடையூறும் விளைவித்துவிட்டது. 'மங்கஞ்சா'[1] என்ற ஒரு வகுப்பினர் லிவிங்ஸ்டனிடம் நட்புக் கொண்டனர்; 'மகோமேரோ'[2] என்ற ஊரில் சமயப்பணி நிலையம் அமைக்க இடந் தந்தனர். இங்கிலாந்திலிருந்து வந்த சமயக் குழாத்தின் தலைவர் இவ்விடத்திலிருந்து பணியாற்றலானார், ஆனால் மங்கஞ்சாக்களை 'அஜாவா'[3] ஏன்ற வகுப்பினர் அடிக்கடி தாக்கினர். லிவிங்ஸ்டன் இப்போர்களில் ஈடுபட விரும்பவில்லை. இவர் சமயத் தலைவரையும் இவ்வகையில் எச்சரித்திருந்தார். ஆனால் அஜாவாக்களால் நன்

1. Mangancha 2. Makomero 3. Ajawa.

மக்கள் துன்புறுவதைக் காணப்பொறாத சமயத் தலைவர், மங்கஞ்சாக்கள் பக்கம் நின்று உதவினர். இப்போர்களில் ஈடுபட்டும், நோய்வாய்ப்பட்டும் சமயத்தலைவர் குழாத்தில் ஒருவர் நீங்க மற்றவர் அனைவரும் இறந்தனர்.

### மீண்டுவர ஆணை

ஷீரேயின் வடக்கிலிருந்த 'ரோவுமா'[1] ஆற்றை ஆராய்வதில் ஈடுபட்டிருந்து மீண்ட விவிங்ஸ்டன் இச் செய்தியைக் கேட்டு மனம் உடைந்தார்; பின் கடற்கரையில் வந்துசேர்ந்ததும் அடுத்த கப்பலில் வந்த செல்வி மக்கென்ஸி[2] முதலிய நண்பர்களைக் கண்டார்; அவர் கொணர்ந்த கடிதம் மூலம் அரசாங்கத்தார் தம் பணியினின்று தம்மை நீக்கி மீண்டுவரப் பணித்ததாக அறிந்தார்.

### மனைவியார் இறப்பு

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற முதுமொழிப்படி இத்துயரச் செய்தியை அடுத்து லிவிங்ஸ்டன் வாழ்வில் மற்றோர் இடியும் வீழ்ந்தது. செல்வி மக்கென்ஸியுடன் நன்னம்பிக் கையில் சிலநாள் இன்ப வாழ்வில் குலவியிருந்த லிவிங்ஸ்டன் மனைவியார், அவ்வாண்டு ஏப்ரல் 27-இல் திடுமென மறைவுற்றார். ஆயிரம் முறை எமனை எதிர்த்துப் போரிட்ட ஆண் சிங்கமான லிவிங்ஸ்டன், அப்போது சிறு பிள்ளைபோல் தேம்பித் தேம்பி அழுதனராம்!

### கலங்கா உள்ளம்

லிவிங்ஸ்டனுக்கு இடையில் வந்த புகழ்ச் செல்வியும், இவர் நூலால் வந்த திருச்செல்வியும் இவரை

1. River Rovuma 2. Miss Mackenzie

142396
...ERSITY EXTENSION LI...

விட்டு நீங்கினர். இப்போது இவர் வருவாய் அற்றுக் கடன் பட்டார். இங்கிலேயில் இவர், தம்மிடமிருந்த 'நயாஸா' என்ற சிறு கப்பலே விற்க எண்ணிப் பம்பாய்க்குச் சென்ருர்; அங்கு விற்க முடியாது போகவே, மீண்டும் இங்கிலாந்து போய்ச்சேர்ந்தார். லிவிங்ஸ்டன் மறுமுறையும் பம்பாய்க்குச் சென்று அக்கப்பலே அழிவிலேயாக(நஷ்டமாக)2600 பொன்னுக்கு விற்ருர். ஆயின் அந்தோ! அப்பொருளும் இவருக்குக் கிட்டாமல், அப்பொருளே விட்டுவைத்த இந்தியப் பொருள் நிலேயம் முடிவுற்றதாம்! இத்தனே தீமைகளிடையேயும் மனங் கலங்காது தம் பணியிலே உறுதி தவருதிருந்த லிவிங்ஸ்டன் மன உரத்தின் தன்மையை என்னென்பது! 'மெய்த்திருவந்துற்றபோதும் வெந்துயர்வந்துற்ற போதும், ஒத்திருக்கும் உள்ளத்து உரவோர்' என்ற பெரியார் இயல்பிற்கு இவர் ஓர் எடுத்துக் காட்டாயினர்.

## 13. மூன்ரும் பிரயாணம்

**அழைத்தமைக்குக் காரணம்**

லிவிங்ஸ்டன் இங்கிலாந்துக்குப் போன ஆண்டு, பாமர்ஸ்டன் பெருமகஞர் 'அமைச்சர் குழு' ஆட்சியின் இறுதி ஆண்டாக இருந்தது. பாமர்ஸ்டன் எப்போதும்போல அவர்மீது விருப்பம் உடையவராகவே இருந்தார். ஆயினும், "போர்ச்சுகீஸிய அரசாங்கம் உங்கள் செயல்கள் எங்களுக்கு மாருக உள்ளன என்று கூறியதனுலேயே உங்களே மீட்டும் அழைக்கவேண்டியதாயிற்று" என்று அவர் கூறினர். பாமர்ஸ்டன் பெருமாட்டி லிவிங்ஸ்டனுக்குத் தேநீர் விருந்தளித்துப் பாராட்டினர்.

### இரண்டாம் பிரயாணம் பற்றிய நூல்

லிவிங்ஸ்டன் தம் குழந்தைகளுடன், ஸ்காட்லாந்தின் பழம் பெருங் குடியினருள் ஒருவரான அர்கைல் கோமான்[1] அழைப்பை ஏற்று அவரூராகிய இன்வெராரி[2] சென்றூர்; அங்கே அக்கோமானின் தூண்டுதலால் தம் இரண்டாம்முறைப் பயணம் குறித்து நூல் ஒன்று எழுதினூர்.

### அடிமை வாணிகம் ஒழியவேண்டும்

1864-ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் 'பாத்'[3] என்னும் இடத்தில் லிவிங்ஸ்டன் பேருரை ஆற்றினூர். அப்போது, "அடிமை வாணிகத்தில் மூழ்கி அழியும் கிழக்காஃப்ரிக மக்களை ஈடேற்றும் பணியில் ஆங்கில இளைஞர் பெருவாரியாக முனைய வேண்டும்" எனக் கூறினூர். அக்கூற்று, போர்ச்சுகீஸிய அரசியலார் பகைமையை இன்னும்பெருக்குவதை இவர் நன்கு அறிவார். ஆயினும் நற்காரியத்தில் யாவர் பகைமையையும் இவர் பொருட்படுத்தியதில்லை. இதன் பயனூக அதன்பின் ஆஃப்ரிகாவில் இவர் பணியெல்லாம் போர்ச்சுகீஸியரின் கைக்கெட்டாத் தொலையிலிருக்கவேண்டி வந்தது.

### 'புதுநிலம் காண்பவர்' பதவி

இத்தகைய அரசியல் சிக்கல்கள் இனி லிவிங்ஸ்டன் பணியைத் தாக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன், நிலஇயலாராய்ச்சிக் கழகத்தைச் சார்ந்த டாடரிக் பெருந்தகையார்,[4] 'புது நிலங் காண்பவர்[5] என்ற முறையிலேயே இவரை அனுப்ப ஏற்பாடு செய்தார். இம்முறை லிவிங்ஸ்டன்

1. Duke of Argyll 2. Inverary 3. Bath 4. Sir. Roderick 5. Explorer.

ஆராய்ச்சிக்கு உட்பட்ட இடங்கள் ரோவுமா ஆறு, தங்கனிகா ஏரி[1] ஆகியவையேயாகும். இப்பகுதியைக் கடற்கரை வழிகளாலோ அல்லது வடக்கே நைல் ஆற்றுப்[2] பகுதியுடனே இணைக்க வழிகாணும்படி லிவிங்ஸ்டன் வேண்டப்பட்டார். அவர் பயணம் தொடங்குமுன் அரசியல்பேரவையில்[3] வருங்காலப் பணிபற்றியும் தம் கோட்பாடு பற்றியும் பேசினார். பின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது இவர்தம் தாயார் மறைவுற்றதாகக் கேட்டு இறுதிக் கடனைச் சென்று ஆற்றினார்.

## வறுமையே தோழன்

லிவிங்ஸ்டனின் பயணச் செலவிற்காக அரசாங்கத்தார் 500 பொன்னும், நில ஆராய்ச்சிக் கழகத்தார் 500 பொன்னும், நண்பரொருவர் 1000 பொன்னும் தந்தனர். அயல்நாட்டு அமைச்சர் என்ற பெயர் இருந்தும், அப்போது அதற்கு ஊதியம் இல்லாததால் இத்தொகை இவருக்குப் போதாதாகவே இருந்தது. 'நயாஸா' கப்பல்விற்ற சிறு தொகையை பம்பாயில் இழந்தபின் இவர் துணிந்து வறுமையையே தமது தோழனைக்கொண்டு ஆஃப்ரிகாவுக்குச்செல்ல எண்ணினார்.

## ஆஃப்ரிகாவை அடைதல்

லிவிங்ஸ்டன், பெங்குவின்[4] என்ற கப்பலில் பயணம் தொடங்கினார்; இந்தியாவில் நாசிக்கிலிருந்து உடன்வந்த ஒருசில தொண்டர்களுடன் மார்ச் திங்களின் இறுதியில் 'ரோவுமா' வின் கரையில் இறங்கினார். இவர் குழாத்தில் இருந்தவர்

1. Lake Tanganyika 2. River Nile 3. Parliament 4. Penguin.

ஏறக்குறைய முப்பத்தறுவர் ஆவர். ஆஃப்ரிகத் தட்ப-வெப்ப நிலையிலும் அங்குள்ள 'செட்சி'[1] என்ற எறும்புவகையினிடையிலும் எவ்வெவ் விலங்குகள் வாழமுடியும் என்றுகாண, லிவிங்ஸ் டன் இந்தியாவிலிருந்து ஒட்டைகள், எருமைகள், கழுதைகள், கோவேறு கழுதைகள் ஆகியவற் றைக் கொண்டுவந்திருந்தார்.

### அராபியர் தொல்லை

ஆகஸ்டு 8-இல் லிவிங்ஸ்டன் நயாஸா ஏரியை அடைந்தார். அராபியர் இவரை முற்றிலும் பகைத்து ஒதுக்கினர். ஏரியின் படகுகள் அனைத் தும் அவர்கள் கையில் இருந்தமையால், லிவிங்ஸ் டன் ஏரியைக் கடக்கமுடியாமல், தம்மைச் சேர்ந் தவருடன் தெற்குப் பக்கமாகச் சுற்றிச் சென்றூர். அராபியர்கள், ஆஃப்ரிகத் தலைவர்களை ஒருவர்க் கெதிராக ஒருவரைத்தூண்டிவந்ததனுல் ஷீரே ஆறு ஏரியிலிருந்து வெளிவரும் இடத்தில் நிலைமை மிக மோசமாக இருந்தது. அவர்களின் தூண்டுத லாலே லிவிங்ஸ்டன் குழாத்திலுள்ள பலர் மனங் கெட்டு லிவிங்ஸ்டனைவிட்டு ஃஜான்ஸிபாருக்குச்[2] சென் றனர். அங்குச் சென்ற அவர்கள், லிவிங்ஸ்டன் இறந்துவிட்டதாகக் கதைகட்டி விட்டார்கள். அத னைக் கேள்விப்பட்ட இங்கிலாந்து நில ஆராய்ச்சிக் கழகம்உண்மையைக் கண்டறிய 'யங்'[3] என்பவரை அனுப்பிற்று; பிறகு யங் எழுதிய அறிக்கைமூலம் அக்கழகம் உண்மையை உணர்ந்தது.

### தங்கனீகா ஏரி

லிவிங்ஸ்டன் இதன்பின் வடமேற்காகத் 'தங்க னீகா' ஏரி நோக்கிச் சென்றூர். உணவுப் பொருள்

1. Tsetse 2. Zanzibar 3, Mr. Young.

கள் செலவாய்விட்டதால் நாட்டுச்சோளமும் ஆட்டுப் பாலும் மட்டுமே அருந்தும் நிலைமை ஏற்பட்டது. லிவிங்ஸ்டன், ஆட்கள் இல்லாமையால் மூட்டை சுமக்கக் கூலி ஆள் அமர்த்தினர். இதற்கும் கையி லிருந்த பணம் போதவில்லை. டிசம்பர்திங்களில் லிவிங்ஸ்டனே நோய்வாய்ப்பட்டார். இவரின் கால்நடைகளும் மருந்துகளும் அடிக்கடி திருடு போயின. இத்தனை தொல்லைகளுக்கு இடையில், லிவிங்ஸ்டன் ஏப்ரலில் லியெம்பா ஏரியை[1] அடைந் தார். இஃது உண்மையில் தங்கனீகா ஏரியின் தென்கோடியே என்பது பின்னுல் தெரியவந்தது.

### மோயிரோ பங்வியோலோ ஏரிகள்

லியெம்பாப் பகுதியில் போர்ப்புயல் பரந்திருந் ததால் லிவிங்ஸ்டன் தெற்குநோக்கித் திரும்பினர்; நைல் ஆற்றுத் தலையிடமாகக் கருதப்பட்ட மோயிரோ ஏரியை[2] நாடினர். 'உபுங்கு' என்ற குழு வினர் லிவிங்ஸ்டனைப் பெருந்தன்மையுடன் நடத் தினர். 'முகமது மோகாரிப்,[3] என்னும் அடிமை வணிகன் அராபியனாக இருந்தும் லிவிங்ஸ்டனுக்கு வழித்துணைவனாக இருந்து உதவினான். அவன் அளித்த விருந்து, நெடுநாள் நல்லுணவு இல்லா திருந்த லிவிங்ஸ்டனுக்கு அமுதமாக இருந்தது. 1867-ஆம் ஆண்டு நவம்பர் 8-இல் லிவிங்ஸ்டனும் மற்றையோரும் மோயிரோ ஏரியை அடைந் தார்கள். இந்த ஏரி 40 கல் அகலம்உடையதாக இருந்தது. லிவிங்ஸ்டன் அதனை நன்கு ஆராய்ந் தார். லிவிங்ஸடன் இப்போது மேற்குறிப்பட்டஏரி யின் தெற்கில் அதனினும் பெரிதெனக் கொள்ளப் பட்ட பங்வியோலோ[4] என்னும் ஏரியைக்காண மீட்

1. Lake Liemba 2. Lake Moero 3. Mohamed Mokarib 4. Lake Bangweolo.

டும் தெற்கே சென்றார். மொகாரிப் இதனைத் தடுக்கவும் எதிர்க்கவும் முயன்றும் பயன் படவில்லை. லிவிங்ஸ்டன் ஜூலை 18-இல் அந்த ஏரியைக் கண்டு அதன் அழகிய பரப்பை நோக்கி மகிழ்ந்தார். அதன்பின் இவர் மீண்டும் அராபியருடன் வந்து சேர்ந்தார்.

## காங்கோவின் கிளையாறு

லிவிங்ஸ்டன் லுவாலாபா ஆறு[1] நைல் ஆற்றில் சென்று சேரும் கிளைதானா என்று காண விரும்பினார். எனவே, இவர் லுவாலாபா ஆற்றின் வழியாகச் சென்று அக்டோபர் 25-இல் மனியூமாக்கள்[2] நாட்டின் தலைநகரான பம்பார்[3] என்னும் இடத்தை அடைந்தார். இங்குத் தம் ஆட்களுக்காகவும் கடிதங்களுக்காகவும் சிலநாள் காத்திருந்தார். இறுதியில் ஆட்களில் ஒரு சிலரே வந்தனர். கடிதங்களில் 40 வராமல் தடுக்கப்பட்டு, ஒன்றே வந்துசேர்ந்தது. வந்த மக்களும் அளவில்லாத முறையில் சம்பளம் கோரிப் பயணத்தைத் தடுக்கப் பார்த்தார்கள். லிவிங்ஸ்டன், பயத்தாலும் நயத்தாலும் அவர்களைச் சமாளித்துக்கொண்டு ஃபிப்ரவரியில் புறப்பட்டுச் சென்றார். அதன்பயனாக லுவாலாபா ஆறு நைலின் கிளையாறு அன்று; காங்கோவின் கிளையே என்பது உறுதிப்பட்டது.

## லிவிங்ஸ்டனும் அடிமைகளும்

லிவிங்ஸ்டன், அடிமைகளை விடுவிக்க முயல்பவராயினும் சிலசமயம் அடிமைகள் நடத்தை இவர் மனத்தைப் புண்படுத்துவதாக இருந்தது. அடிமைகள், தாங்கள் அடிமையாக இருக்கும்போதே

1. River Lualaba 2. Manyuema 3. Bambarre.

தங்கள் தலைவர்கள் முன்னிலையில், தமக்கு உணவு விற்ற வணிகர்களை அடிக்கவும் அவர்கள் குழந்தைகளைப் புடைக்கவும் துணிந்தார். அடிமைத்தளையை அகற்றப் பாடுபட்ட வீரராகிய லிவிங்ஸ்டன், துப்பாக்கி நீட்டி அவ்வடிமைகளை அச்சுறுத்தித் திருத்த வேண்டியதாயிற்று. இவரிடம் அனுப்பப்பட்டவர்கள் பிரிட்டிஷ் குடிமக்களான பனியர்களின்[1] அடிமைகள் ஆவர். அவர்களும் பொய், சூது, வஞ்சம், கொடுமை ஆகியவற்றுக்கு உறைவிடமாக இருந்து, பெருந்தொல்லை கொடுத்தனர். லிவிங்ஸ்டனைவிடச் சற்றுக் குறைந்த அருளுள்ளம் உடையவர்கள் சமயப்பணித் தலைவர்களாக இருப்பின், இதனைக்கண்டு, 'அவர்களின் அடிமைத்தளை சரியானதே' என்றும் கூறியிருப்பர். ஆனால் லிவிங்ஸ்டன் இக் கொடுமைகளைச் செயலில் கண்டித்துக்கொண்டே, மனத்தில் அவர்களின் ஆன்மிக இழிநிலைக்கு இரங்கினார். முறைதவறித் தவறிழைக்கும் தனையனைத் தந்தை ஒறுக்கும்போதும் தந்தையின் அன்பு மாறாதன்றோ?

## அறிவற்ற அடிமைகள்

லிவிங்ஸ்டனின் வேலையாட்கள் விடுதலை பெற்ற அடிமைகளாயினும் இவரையே கொல்லச் சதிசெய்தனர். 'அபெட்'[2] என்ற ஒருவன் உண்மையுள்ளவனாக இருந்து முன்னெச்சரிக்கை தந்ததினால் லிவிங்ஸ்டன் விழிப்பாக இருந்தார். இவர், அவர்களை வேலையிலிருந்து நீக்க முன்வந்ததும் அவர்கள் லிவிங்ஸ்டன் காலில் விழுந்து மன்னிப்புப் பெற்றனர். ஆனால் அவர்கள் மன்னிப்புக்கு உரியவரல்லர் என்பது விரைவில் தெரியவந்தது.

1. Banias 2. Abet.

டுகும்பே[1] என்ற ஒருவர் அராபிய நண்பர் சிலருடன் லிவிங்ஸ்டனைக் கண்டனர். லிவிங்ஸ்டனுக்கு நாட்டில் படகு கிடைக்காததின் காரணம் அவ்வேலையாட்கள் லிவிங்ஸ்டனைப் பற்றிப் பொல்லாங்கு கூறிப் பழி பரப்பியதே என்று அவர் காட்டினர். அதன்பின் லிவிங்ஸ்டன் அவர்களை வேலையினின்றும் அகற்றி, டுகும்பெ என்பவரிடம் 2000 வெள்ளி (400 பொன்) கொடுத்துப் பத்து ஆட்கள் பெற்றார்.

### ஸ்டான்லியின் வருகை

லிவிங்ஸ்டன் மீண்டும் உஜ்ஜியை அடைந்தார். இங்கே அராபியரும் பிறரும் இவரை நண்பராக நடத்தினர். எனினும் பலர் இவர் பொருள்களைத் திருடினர். உடலும் தளர்ந்து உள்ளத்தில் உரமும் சிதைந்த இந்நேரத்தில் 'ஸுஸி'[2] என்பவர் லிவிங்ஸ்டனிடம் வந்து ஓர் ஆங்கிலேயர் வந்திருப்பதாக அறிவித்தார். ஆனால், வந்தவர் லிவிங்ஸ்டன் நண்பர் ஸ்டான்லியே[3] யாவர். அவர் உண்மையில் அமெரிக்கர்: 'நியூயார்க் ஹெரால்டு' என்ற அமெரிக்கச் செய்தித்தாள் நடத்துவோரால் அனுப்பப்பட்டவர். அவர் அனுப்பப்பட்டதன் நோக்கம் லிவிங்ஸ்டனைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுவதும்; இறந்திருந்தாராயின் பாராட்டுடன் லிவிங்ஸ்டனின் எலும்புகளை எடுத்துவருவதுமே யாகும். லிவிங்ஸ்டனை உயிருடன் கண்ட அவர் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. லிவிங்ஸ்டனும் அவரைக் கண்டவுடன் 'கரைகாணாப் புயற்கடலிற் புணைகண்டாற் போல' அளவிலா உவகை கொண்டார்; ஏனெனில் அவர் வரவு லிவிங்ஸ்டன் வாழ்வில் ஒரு புதிய கோளின் வரவு என்றே கூறத்தக்கதாக இருந்தது.

1. Dukumbe 2. Susi 3. Mr. Stanley.

துன்பமிக்க அவருடைய பிற்கால வாழ்வில் அது பேரமைதியை உண்டு பண்ணிற்று.

## 14. லிவிங்ஸ்டனின் மறைவு

### உரிய காலத்தில் உதவி

லிவிங்ஸ்டனுக்கு உரிய நெடுநாளைய கடிதங்கள் ஒரு பணியாளிடமிருந்தன. ஸ்டான்லி லிவிங்ஸ்டனைக் காண வரும்போது அவ்வேலையாளையும் அழைத்து வந்திருந்தார். அக்கடிதங்களுள் லிவிங்ஸ்டன் மக்கள் எழுதிய கடிதங்களும் இருந்தன. இவையன்றி ஸ்டான்லி வேறு நற்செய்திகளும் கொண்டுவந்திருந்தார். அஃதாவது பிரிட்டிஷ் அரசாங்கம் மீட்டும் லிவிங்ஸ்டனின் பணிகளின் அருமைபெருமைகளை உணர்ந்து இவருக்கு 1,000 பொன் தர இணங்கியது என்பதேயாகும். ஸ்டான்லி கொணர்ந்த பொருள்களால் லிவிங்ஸ்டன் உடல்நிலையும் செல்வ நிலையும் உயர்வுற்றன; செய்திகளால் உளநிலையும் செம்மையுற்றது.

### இருவரும் செய்த ஆராய்ச்சி

லிவிங்ஸ்டன் கண்டறிய வேண்டுமென ஆவல் கொண்ட செய்திகள் இரண்டு: ஒன்று லுவாலாபாத் தலைநிலம் பற்றியது; மற்றொன்று தங்கனீகா வடபுற ஆராய்ச்சி. இவற்றுள் பின்னதையே முதலில் கண்டறிய லிவிங்ஸ்டன் முடிவு செய்தார். எனவே ஸ்டான்லியுடன் 1871-ஆம் ஆண்டு நவம்பர் 16-இல் பயணமானார். அவர்கள் தாங்கள் நேரிற் கண்டவற்றிலிருந்து, 'தங்கனீகா ஏரிக்குள் லுஸைஜ்[1] என்ற ஓராறு பாய்ந்ததாயினும் எந்த

1. Lusize.

ஆறும் அதனினின்று வெளிவரவில்லை' என்று உணர்ந்தார்கள். அதன்பின் அவர்கள் டிசம்பர் 13-இல் உஜ்ஜி வந்து சேர்ந்தார்கள்.

## ஸ்டான்லியின் பாராட்டு

இவ்விரண்டு திங்கட் காலத்துக்குள் லிவிங்ஸ்டனுடன் ஸ்டான்லி நன்கு பழக வாய்ப்பு ஏற்பட்டது. பழகப் பழக லிவிங்ஸ்டனிடம் அவர் கொண்ட நட்பும் மதிப்பும், வளர்பிறைபோல் பெருகின. "லிவிங்ஸ்டனை ஒத்த வீரமும், விடாமுயற்சியும், பொறுமையும், தன்னலமறுப்பும், எதிரிகளிடையும் மாறாத அன்பும் உடைய பணியாளரை நான் கண்டதில்லை" என்று அவர் மனமாரப் பாராட்டினர். லிவிங்ஸ்டன் தம்மை வஞ்சித்துத் தம்மீது கல்லெறிவோரையும் எதிர்த்துச் சுடுவதில் விருப்பம் இல்லாதவர். ஸ்டான்லி அவ்விதம் செய்வதையும் லிவிங்ஸ்டன் தம் அருட் பார்வையால் தடுத்தார். லிவிங்ஸ்டன் கறுப்பு மக்கள் கண்களில் வெள்ளையர் உண்மை நாகரிக மேம்பாட்டுக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் தோற்றினர்; வெள்ளையர் கண்களிலோ 'நாட்டு மக்களின் ஒப்பற்ற நண்பர்' எனத் தோற்றினர்.

## பொறுமைக்கு இருப்பிடம்

தங்கனிகா ஏரிக் கரைகளிலுள்ள மக்கள், அதன் செழித்த கரையிடையே, நீரில் வாழும் மீன்போலக் கவலையற்று வாழ்ந்திருந்தனர். பல இடங்களில் அம் மக்கள் லிவிங்ஸ்டன் முதலியோரிடம் நட்புக்காட்டி ஏமாற்றப் பார்த்தனர். ஆனல், நல்ல காலமாக லிவிங்ஸ்டன் அவர்களிடமிருந்து

தப்பி அகன்றனர். சில இடங்களில் கரையிலிருந்த மக்கள் லிவிங்ஸ்டனைக் கரையேறும்படி தூண்டினர்; கரையேருதது கண்டு கல்லெறிந்தனர். லிவிங்ஸ்டன் அப்போதும் 'அவர்களை எதிர்க்க வேண்டா' என்று கூறினராம்! பல இடங்களில் அராபியர்களும் லிவிங்ஸ்டனின் வாய்மை, பொறுமை, நகைச்சுவை ஆகியவற்றில் ஈடுபட்டுத் தம் இயற்கைக்குமாருக அமைதியுடன் நடந்து கொண்டனர்.

### பிரியா விடை

உஜ்ஜியில் லிவிங்ஸ்டன் ஸ்டான்லியுடன் சில காலம் இருந்தார். அதுகாலை ஸ்டான்லி, "எஞ்சிய வேலையை ஒத்திவைத்துத் தாய்நாடு சென்று உடலைச் சரிப்படுத்திக்கொண்டு பின் ஒருகால் திரும்பி வரலாம்" என லிவிங்ஸ்டனுக்கு வற்புறுத்தினுர். ஆனுல் லிவிங்ஸ்டன் எப்படியாவது எடுத்த பணியை முடித்தே ஆகவேண்டும் என்று உறுதியாக இருந்தார். எனவே உனுன்யெம்பி[1] வரையில் சென்று அங்குள்ள தம் பொருள்களை எடுத்துக் கொண்டு, தாய் நாட்டிலிருந்து வரும் கடிதங்களையும் பாாத்துவிட்டு அதன்பின் வடக்கே செல்வது என்பது உறுதியாயிற்று. லிவிங்ஸ்டன் இப்போது ஸ்டான்லியின் விருந்தினராதலால் இவர் ஏறிச் செல்ல நல்ல கழுதை ஒன்று (அந்நாட்டு வழக்கப்படி) அனுப்பப்பட்டிருந்தது. ஆனுல், மக்கட் பணியாளருள் சிறந்தவரான லிவிங்ஸ்டன் அதனை நடக்க விட்டு, எல்லோரையும் போலத் தாமும் நடந்தே வந்தார். அங்ஙனம் நடந்தமையால் காலெல்லாம் கொப்புளங்கள் உண்டாயின. இதனுல் லிவிங்ஸ்டன்

1. Unanyembe.

உனன்யெம்பியில் சிலநாள் தங்கினர். அங்கே லிவிங்ஸ்டன் பொருள்களிற் சில கொள்ளையடிக்கப் பட்டிருந்தன; சில, கறையான்களுக்கு இரை யாயின. ஆயினும எஞ்சியவையே லிவிங்ஸ்ட னுக்கு ஏராளமானதாகத் தோற்றின. நண்பரிரு வரும் பிரியா விடை பெற்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

## அரிய குறிப்புகள்

ஸ்டான்லி சென்ற சில மாதங்கட்குப் பிறகே அவரால் ஃஜான்ஸிபாரிலிருந்து ஆட்கள் அனுப்பப் பட்டனர். லிவிங்ஸ்டன் அதுவரையில் அங்கிருந்து அந்நாட்டில் கண்ட பல அருஞ் செய்திகளைச் சுவை படச் சித்தரித்துவந்தார். அவற்றுள் அந்நாட்டுக் கொடிய பாம்புகளைப் பூனை கொல்வதை விவரிக் கும் சித்திரம் ஒன்றாகும். பாம்பு அறியா வண்ணம் பூனை பதுங்கிவந்து பாம்பின் படத்தில் ஓர் அறை அறைந்து தலையை அழுத்திக்கொண்டு கழுத்தைக் கடித்து எறிந்துவிடும்; பின் துடிதுடிக்கும் உடலை விட்டுப் போய்விடுமாம். பூனையின் இவ்வருஞ் செயலுக்காகவே எகிப்தியர் பூனையை வணங்கி வந்தனர் என்று அவர் கருதினர்.

## நாட்டுப் பிள்ளைகள்

'தங்கனீகாப் பகுதியில் நாட்டு மக்களிடையே தாய்மார் தம் குழந்தைகளை அடிமைகளாக விற்ற னர்' என்ற செய்தி ஐரோப்பாவில் கூறப்பட்டு வந் தது. இஃது ஆஃப்ரிகரைப் பற்றி ஐரோப்பியர் இழிவான எண்ணங் கொள்வதற்காகவே பரப்பப் பட்டது. லிவிங்ஸ்டன் தாம் கண்டவரையில், ஆஃப் ரிக உள்நாட்டு மக்கள் கொடிய அடிமை வணிகர்

கைப்பட்டன்றி அதனை ஆதரிக்கவில்லை; அவர்களும் அன்புக்கும் ஆதரவுக்கும் இணங்கும் இயற்கைப் பண்பு உடையவர்களே' என்று உரைத்துள்ளார்; மேலும் "ஆஃப்ரிகப் பிள்ளைகளுக்குப் போதிய நல்ல பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் இல்லை; இத்துறையைத் திருத்தவேண்டும்" என்றும் கூறியுள்ளார். லிவிங்ஸ்டன் இங்கே உணவு அற்றவர்க்கு உணவும், உடையற்றவர்க்கு உடையும், ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களுக்கு ஆதரவும் கொடுத்துவந்தார் என்பது இவர் குறிப்புகளால் தெரிகிறது.

### உதவிக்கு ஆட்கள்

1872-ஆம் ஆண்டு ஆகஸ்டு 25-இல் ஸ்டான்லி தெரிந்தெடுத்தனுப்பிய 56 ஆட்களும் வந்தனர். "இவர்கள் மகோலோலோக்களைப் போல வீரமுடையவர்கள் அல்லராயினும், அவர்களைப் போலன்றி உண்மையும் உழைப்பும் உடையவர்கள்" என்று லிவிங்ஸ்டன் எழுதியுள்ளார். ஆனால் பின் அவர்கள் செயல்களிலிருந்து அவர்கள் வீரத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்பது தெரிந்தது.

### தளர்ந்த நிலையிலும் பிரயாணம்

இப்பயணத்தில் சிறிது தொலைவுதான் லிவிங்ஸ்டனால் தாமாகச் செல்லமுடிந்தது. நோயாலும் தளர்ச்சியாலும் நடக்கமுடியாத நிலைவந்தது. எனினும் பயணத்தை நிறுத்த மனமின்றி லிவிங்ஸ்டன் சிவிகையில் பயணம் செய்தார். சிவிகை செல்லமுடியாத இடத்தில் இவர் தம் உண்மைமிக்க பணியாட்களான ஸூஸி, சுமா ஆகியவர்களால் தூக்கிச் செல்லப்பட்டார். இந்நிலையிலும்

இவர் தாம் கண்டவற்றையும் அறிந்தவற்றையும் தம் குறிப்பில் எழுதத் தவறவில்லை என்பது பெருவியப்பேயாகும். ஆனால் இவர் ஏப்ரல் 23 முதல் 26 வரை ஒன்றும் எழுத முடியாமல் தேதி மட்டும் குறித்தார். 27-இல் "நான் முற்றிலும் தளர்ந் திருக்கிறேன்; பாலாடு வாங்கும்படி கூறியிருக் கிறேன்; மோலிலாமோ ஆற்றின்[1] பக்கம் வந்து சேர்ந் திருக்கிறோம்" என்று எழுதினார்.

### லிவிங்ஸ்டன் மறைவு

மறுநாட் காலை முதல் லிவிங்ஸ்டனுக்குப் பார்வை குன்றியது. ஒலிகளைக் கேட்டறியும் அறிவும் குன்றியது அன்று இரவு. லிவிங்ஸ்டன் வெந்நீர் கேட்டார். எனினும் அதனை முட்டுப் பாட்டுடன்தான் உட்கொள்ள முடிந்தது. காலை 4 மணிக்குக் கடவுளைத் தொழுத நிலையிலேயே லிவிங்ஸ்டன் ஆவி இறைவனடி சார்ந்தது. ஆஃப் ரிகாவின் மாபெரு நண்பராகிய இவர் ஆஃப் ரிக மண்ணிலேயே தம் உடல் நீத்தார்.

### உடல் அடக்கம்

லிவிங்ஸ்டனின் பணியாட்கள், லிவிங்ஸ்டன் உயிர்நீத்த பின்பும் இவர் பக்கம் நின்று மாறாது பல துன்பங்களைத் தாங்கி இவர் உடலைத் துறை முகம் வரை கொண்டுவந்து சேர்த்தனர். லிவிங்ஸ் டன் இருதயமும் குடலும் ஜான்ஸிபாரில் அடக்கம் செய்யப்பட்டன. அதன் பின் உடல் உலர்த்தப் பட்டுக் கப்பலில் ஸதாம்ப்டன் கொணடுவரப்பட்டு, ஆங்கில நாட்டார் அனைவர் கண்ணீரிடையேயும்

1. River Molilomo.

பாராட்டிடையேயும் வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில்[1] அடக்கம் செய்யப்பட்டது.

## 15. லிவிங்ஸ்டனின் அருங்குணங்கள்

### பெருமைக்கு மூலகாரணங்கள்

உலக வரலாற்றில் தம் பெயரைப் பொன் எழுத்துக்களில் பொறித்த புகழுடைய பெரியோர் வாழ்கை வரலாறுகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் பெறப்படுவன இவையாகும். ஒன்று, அவர்கள் பெருமைக்கெல்லாம் மூலகாரணமாக இருப்பது அவர்கள் கொண்ட உயர் நோக்கங்களும் குறிக்கோள்களும் ஆகும். இரண்டு, அக்குறிக்கோள் வாழ்க்கையில் அவர்கள் தம் திட்டத்தை எவ்வளவு உயர்வாகத் தீட்டமுடியுமோ அவ்வளவு உயர்வாகத் தீட்டினர் என்பது. நெப்போலியன், நெல்ஸன் போன்ற பெரியார் தம் சொற்ஞெகுதியில் 'முடியாதது' என்ற சொல் இல்லை என்று குறிப்பிட்டது இதனையே யாகும். லிவிங்ஸ்டன் தம்வாழ்க்கையின் தொடக்கத்தில் தம் விளையாட்டிலும் இப்பண்பைக் காட்டினர். இவர் மற்றப் பிள்ளைகள் ஏருத உயரத்துப் பாறை மீதேறித் தம் பெயர் பொறிக்க முயன்றார். வாழ்க்கைப் பணியிலும் இவர் இதே உயர் பேரார்வம் கொண்டிருந்தார் என்பதைத் தம் இறுதிநாள் வருமுன் கைக்குறிப்பில் எழுதிய ஒரு செய்தி காட்டுகிறது: "என் இறுதி முயற்சியாகிய இவ்வொன்றைச் செய்ய என்னல் முடியுமாயின், அது வேறு எவராலும் மறக்கவொண்ணுச் செயலாகிவிடும். என்னுடைய இந்த இறுதி முயற்சியின் போதுதான் தீயோன் (சைத்தான்) நோய், இடை-

1. Westminister Abbey.

யூறு, மன உடைவு, வலிவின்மை ஆகிய தடைக ளால் என்னை முறியடிக்கப் பார்க்கிருன். இறை வன் திருவுளம் என்பக்கமிருந்தால் நான் நற்பேறு உடையவனே,'' என்பதேயாம்.

## வீர வாழ்க்கை

லிவிங்ஸ்டனை 'ஆஃப்ரிகாவின் இளஞ் சிங்கம்' என்று கூறுவதுண்டு. இவர் சிங்கங்களின் வேட் டையைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில், "சிங்கங் கள் பிறர் எதிர்த்தபோதன்றிப் போரிடா; அவை வலிமையுடையனவே அன்றி வீரங் குன்றியவை" எனக் கூறியுள்ளார். விலங்காகிய சிங்கம் எப்படி யாயினும் ஆஃப்ரிகச் சிங்கமாகிய லிவிங்ஸ்டனிடம் இக் குறையைக் காணமுடியாது. தீமையைக் கண்ட இடத்திலெல்லாம் லிவிங்ஸ்டன் சீறி எழுந்து அதனை அறைந்துகொல்லத் தயங்கியதில்லை. அத் தீமை பகைவரிடமிருந்தபோது மட்டுமன்று, தம்மவ ரிடமிருந்தாலும் அதனைக் கண்டிக்க இவர் தயங்கிய தில்லை. ஆஃப்ரிகா, ஐரோப்பிய வீரர் பலருக்குக் கல்லறையாக அமைந்த நாடாகும். அத்தகைய நாட்டில் கொடிய மக்களிடையே மட்டுமன்றி மக் கள் கொடுமையினும் மிக்க பகைகளாகிய நோய், விலங்குகள், பாலைவனங்கள், செட்சி எறும்புகள் ஆகியவற்றினிடையேயும் லிவிங்ஸ்டன் வாழ்ந்து, பல்லாயிரங் கல் தொலைபயணம் செய்து தம் பணியை வெற்றியுற முடித்தது இவ்வீரத்தின் பய ஞகவேதான்.

## அரிய வீரம்

வீரமென்பது போர்க்களத்தில் எதிரிகள் முன் மட்டும் பயன்படுவது. அது வெஞ்சினத்தால் வலி

யுறுவது. ஆனால் லிவிங்ஸ்டன் வீரம் அத்தகை யது அன்று. நோயுடன் போராடுவதும் தோல்வி யுடன் போராடுவதும் வெறும் வெறுபிடித்த வீர மன்று. அது பொறுமையும் விடாமுயற்சியும் மன உறுதியும் உடைய வீரமாகும். காலன் பிடி தம் மீது தாவியபோதும் எடுத்த காரியம் விடாமல் இறுதி மூச்சுவரைப் பாடுபட்ட பெருமை, லிவிங்ஸ் டன் போன்ற ஒரு சிலர்க்கே உரியதாகும்.

## குடும்பத்தில் அன்பு

வீர வாழ்க்கையுடையவர் பலர் நெஞ்சில் ஈர மற்றவராக இருத்தல் காணலாம். அத்தகைய வீரம் அவர்களைப் பெரியார் ஆக்கத் தக்கதன்று. லிவிங்ஸ்டனே குடும்ப வாழ்விலும் பொது வாழ்வி லும் அன்பே உருவானவர்; தாய் தந்தையரிடம் தம் கடமை உணர்ந்து அன்பு காட்டியவர்; வாழ்க் கையில் ஒவ்வொரு கணமும் மனைவியுடன் இருந்த போதும், பிரிந்திருந்தபோதும், மனைவியார் இறந்த பின்னும் அவரை இவர் மனக்கோவிலில் கொண்டு போற்றினர்; இச் செய்தி எவர் மனத்தையும் கனிவுறச் செய்யும் இன்ப நாடகமாகும். லிவிங்ஸ் டன் தம் புதல்வர் புதல்வியாரிடம் அன்பு கொண் டிருந்ததோடு அவர்கள் தம் குடி உயர்வுக்கு ஒத் தவராக இருப்பது கண்டு இறும்பூது எய்தினர். ஸ்டான்லி போன்ற நண்பர் தம் பணியினும் மிகுதி யாகத் தம் உடல் நலத்தை வற்புறுத்திய காலையில் லிவிங்ஸ்டன் புதல்வி ஆக்னிஸ், "என்னை எண்ணி உங்கள் பணியைத் துறந்துவரவேண்டுமென்ப தில்லை. உங்கள் பணியை நிறைவேற்றி வர விரும்பினீர்களாயின், அதனால் இறைவன் உள்ளம் நிறைவுறும். எங்கும் அது நிறைவையே தரும்,"

என்று எழுதியிருந்தார். அதுகண்ட லிவிங்ஸ்டன் ஸ்டான்லியிடம், 'இதோ என் பழங்குடியின் ஒரு சிறு அரும்பு'[1] என்று கூறிப் பெருமைப்பட்டாராம்!

## அருள் உள்ளம்

லிவிங்ஸ்டன் அன்பு, அவர் குடும்பத்துடன் மட்டும் நின்றிருந்தால்கூட அஃது ஒரு கவிஞன் சித்திரத்துக்கு உரியதாயிருக்கும். ஆனால், அது குடும்ப எல்லையைக் கடந்து நாட்டெல்லையையும் கடந்து உலகையே தழுவி நின்று 'அருள்' என்னும் பெயர்பெற்றது. சமயப்பற்றிலும் அது தம் சமயம் பிறர் சமயம் என்ற வேற்றுமை கடந்தது. ஆஃப்ரிக மக்கள் தம் சமயத்தில் சாராதவிடத்தும் அவர்கள் உள்ளார்ந்த நலன்களைக்கேட்க லிவிங்ஸ்டன் தயங்கியதில்லை. மொகாரிப் போன்ற அராபியர்களை இவர் தம்மவர்போல் நடத்தியும், ஆஃப்ரிகரிடையே ஒப்புரவு காட்டியும் அனைத்துலகும் தம் குடியெனநடத்தி அனைவரையும் தம் வயப்படுத்தினர். இக்காட்சி கண்ட ஸ்டான்லிபோன்ற பெரியார், லிவிங்ஸ்டனைத் தெய்வத்துக்கு அடுத்தபடியில் வைத்துப் போற்றியதில் வியப்பில்லை.

## இனிய சொல்லாளர்

வெளியாருக்குப் பெரியாராக இருக்கும் பலர் வீட்டாருக்குச் சிறியாராக நடப்பதுண்டு. லிவிங்ஸ்டன் தம் பணியாட்களிடத்திலும் நடுநிலையும் ஒத்துணர்வும் நீக்கியதில்லை. லிவிங்ஸ்டன் பணியாள் ஆகிய ஸூஸி என்பவன் ஒருநாள் குடிவெறியால் தம் படுக்கையில் படுத்திருப்பதைக் கண்டார்; அதற்

1. "A chip of the old block from my family."

காக இவர் சினங்கொள்ளாது அவனைத் தட்டி எழுப்பி, 'குடிப்பதில்லை என்ற உறுதிக்கு இதுதான் எடுத்துக்காட்டோ'? என்றனராம். இப்பெருந்தன்மையின் பயனாகவே கடுமையான தலைவரைவிட இவரிடம் பணியாட்கள் பற்றும் அச்சமும் பன்மடங்கு உடையவராக இருந்தனர்.

## கிறிஸ்துவின் வாழ்க்கை

ஆப்ரிக மக்களிடையே லிவிங்ஸ்டன் ஏற்படுத்திய மனமாற்றம் சொல்லும் அளவினதன்று. இவருக்கு முன்னும் பின்னும் வெள்ளையர் செய்த பல பழிகளையும் படிப்படியாக ஆப்ரிகர் மனத்தினின்றும் அகலச் செய்வதாயிருந்தது இவர் அருள் நிறைவு. இவரை ஒரு முறை அறிந்த ஆப்ரிக மக்கள், வெள்ளையரினும் மிகுதியான பொறுமையும் பெருந்தன்மையும் உடையவராய் இன்னா செய்தாரையும் நன்னயம் செய்து ஒறுக்கும் தன்மை உடையவராயினர். இவ்வகையில் லிவிங்ஸ்டன் வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்கை என்று கூறுவதைவிடக் கிறிஸ்துவின் வாழ்க்கையாகவே இருந்தது என்று கூறலாம்.

## நடுவுநிலை உணர்வு

லிவிங்ஸ்டனின் நடுவுநிலை உணர்வு வியக்கத்தக்கதாகும். இவர் தாம் என்றும் நேர்மையுடையவர் ஆயினும், பிறர் நேர்மை தவறியவிடத்தும் நடுவுநிலைமை நீங்கிச் செயலாற்றுவதில்லை. இவருடைய அராபிய நண்பர், இவருக்குமாறாக நடந்து படுகொலைகள் செய்தபோதும் தாக்கப்பட்டவர்க்குத் தாக்குதலின் பின் உதவினரேயன்றி அவர்களுக்காகக்கூடச் சண்டையில் கலக்கவில்லை.

அராபியர் பிழையுணர்ந்து பிழை பொறுக்கவேண்டியபோது, 'யானே பிழைகள் நிறைந்தவன்' என்று கூறினர் என்றால், இவருடைய முழு அருள் நிலையின் திறத்தை என்னென்று கூறுவது!

### துறவு வாழ்கை

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய லிவிங்ஸ்டன் வாழ்க்கை, உண்மைத் துறவு வாழ்க்கைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். 'சிலுவையைத் தாங்கி நட' என்ற இயேசு பெருமானின் விவிலிய உரையைச் சிலர் 'சிலுவைக் குறி தாங்கி நட' என்று கொள்ளுவர். ஆனால் அவர் தியாக வாழ்வை ஏற்று நட' என்று கொண்டார். ஆணவம், காமியம், மாயை (தற்பெருமை, தன்னலம், பொருட் பற்று) ஆகிய மும்மலங்களும் (குற்றங்களும்) அறுத்த நற்றுக்கு அறிகுறி நீது என உணராது புறநீறுமட்டு மணிந்து தருக்குபவர் உண்டு. உண்மைத்துறவு புறவேடமன்று. புறவேடத்துடன் அதன் உட்பொருளாகிய தன்னலத் தியாகமும் பொதுநலத் தொண்டுமே என்பதை லிவிங்ஸ்டன் வாழ்வு எடுத்துக் காட்டுகிறது.

### கல்லறை வாசகம்[1]

வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபத்தில் லிவிங்ஸ்டன் கல்லறைமீது இவர் நாட்குறிப்பினின்றெடுத்த ஒரு வாசகமே கல்லறை வாசகமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. லிவிங்ஸ்டனின் வாழ்க்கைக் குறிக்கோளின் உயர்வையும் இவர் சமயப் பணியின் விரிவையும் அருள் விரிவையும் அது நன்கு எடுத்துக் காட்டுகிறது. "இறைவனுடைய மங்காத அருட் செல்வங்கள் மாந்தர் அனைவர்மீதும் பொழிக—

1. Epitaph.

அமெரிக்கர், ஆங்கிலேயர், துருக்கியர் அனைவர் மீதும் பொழிக''* என்பதே அக்குறிப்பு ஆகும்.

### சமய உணர்வு

ஸ்டான்லி லிவிங்ஸ்டனது சமய உணர்வுபற்றிக் கூறுகையில், "அவரது சமயம், அவர் உள்ளார்ந்த இடைவிடா விழிப்புமிக்க வாழ்க்கை நடைமுறையேயாகும். அஃது அவர் யாரிடமும் வெளிப்படையாகக் காட்டும் அல்லது உரத்து விளம்பரம் செய்யும் பொருளன்று. அஃது அவர் செயல் ஒவ்வொன்றிலும் உள்ளூரச் சந்தடியின்றி நடைமுறையில் காட்டப்படும் ஓர் அடிப்படைப் பண்பாகும். சமயத்தின் உயர்ந்த பண்புகளை அவர் வாழ்க்கை முறையில் காணலாம். அவர் வேலைக்காரரிடம் நடந்துகொள்ளும் முறையிலும் ஆப்பிரிக நாட்டு மக்களிடம் நடந்துகொள்ளும் முறையிலும் தீவிர வைராக்கியமுடைய முஸ்லீம்களிடம் நடந்துகொள்ளும் நடைமுறையிலும் அவர் சமயத்தைச் சிறப்பாகக் காணலாம்'' என்று கூறுகிறார்.

### இவர் வரலாற்றுப் பயன்

லிவிங்ஸ்டன் போன்ற பெரியார் நம் தமிழ் நாட்டில் தோன்றி நம் நாட்டு வாழ்வு சமய வாழ்வு பொதுவாழ்வு ஆகியவற்றுககு உயிர் கொடுத்து, அதன் பழம்புகழைப் புதுப்பிக்கவேண்டும். இவர் போன்றவர் வாழ்க்கைகள இளைஞர் உள்ளத்தில் படிவதால், அத்தகைய பணபுகள் வளர்ந்து வாழ்கை பெருமை அடையும் என்பதில் ஐயமில்லை.

---

*எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாது வேறொன் றறியேன் பராபரமே'' என்ற தாயுமானவர் பொன்னுரை இங்குக் கருதத்தக்கது.

14396
...SITY EXTENSION LIBR...
1961